

311. சவரிப் பாட்டி

இந்த வேடச்சிக்குத்தான் தவத்தில் எவ்வளவு மோகம்! மூடர்களான வேடர்களும் முனிவர்களின் 'ஸத்ஸங்கம்' பெற்று நல்வழிப்பட இயலும் என்பதற்குக் குகன் ஒரு நல்ல சாட்சி. அந்த வேடர் தலைவனை ராமன் நகர் நீங்கிக் கங்கைக் கரையிலுள்ள காட்டில் அடி வைத்ததும் சந்தித்துச் சகோதரனாக்கிக் கொள்கிறான். அவனுக்கு இம்மையில் புதுவாழ்வு என்ற இச்சுவை அளிக்கிறான். இந்த வேடப் பெண்ணை ஆரணியத்திலிருந்து கிஷ்கிந்தைக்குப் போகும் வழியில் சந்தித்து இவளுக்கு மறுமைப் பெருவாழ்வு என்ற அச்சுவை அளிக்கிறான்.

குகனும் சவரியும்

ஆசிரமங்களோடு கூடிய கங்கையாற்றின் வடகரையிலும் குடிசைகளோடு கூடிய தென்கரையிலுமுள்ள காட்டை 'நாம் ஆளும் காடு' என்று சொல்லிக் கொள்ளும் நிலையில் குகன் ஏகபோகக் காட்டரசனாய் வேட்டுவர் தலைவனாய் விளங்குகிறான். இந்தச் சவரி என்ற வேடப் பெண்ணோ காட்டிலுள்ள ஆசிரமம் ஒன்றில் பணி செய்துகொண்டிருந்தவள். குகன் தன் காட்டின் ஒரு பகுதியில் — அதாவது, கங்கையாற்றின் வடகரையிலே—வசித்து வரும் முனிவர்களுடைய கூட்டுறவால் திருந்தி ஆன்ம பக்குவம் பெற்றது போல், சவரி மதங்க முனிவரின் ஆசிரமத்திலே அவருடைய சீடர்களுக்கு உபசாரஞ் செய்த வண்ணம் ஆன்ம பக்குவம் பெற்றுத் துறவறம் பூண்டிருக்கிறாள். வேடப் பெண் தவப் பெண்ணாகி ராமபக்தையாக விளங்குகிறாள். வேடர் தலைவனோ தவமில்லாமலே நட்புக் காதல் பூண்டு பரம பக்தனாகி ராமனால் தம்பியாகவும் மதிக்கப் பெறுகின்றான்.

'சவரி' — வடமொழியில் 'சபரி' — சபார் என்ற வகுப்பைச் சார்ந்தவள். சபார்கள் க்ஷத்திரியப் பெண்ணுக்கும் வைசியக் கணவனுக்கும் பிறந்த பிரதிலோம ஜாதியார் என்று கருதப்பட்ட போதிலும், இவர்கள் தேன்

கொணர்ந்து விற்கும் வேடர்களாவர். குகனும் சவரியும் 'தாழ்ந்த வகுப்பின' ரென்பதும், ராமனருளால் இருவரும் 'மேற். குல'த்தினருக்கும் எட்டாத பேறு பெற்றன ரென்பதும் தமிழ்ப் பெரியோர் கருத்து, —கம்பன் குறிப்பு.

ராமன் கங்கையின் வட கரைக்கு வந்து முனிவர்களின் அதிதியாகத் தங்குகிறான் என்பதை அறிந்து குகன் மீனும் தேனும் சேர்த்துக் கொண்டு வந்து ராமனுக்குக் கொடுத்து உபசரிக்கிறானல்லவா? சவரியும் தான் வசிக்கும் மதங்காசிரமத்துக்கு ராமன் வரப்போகும் செய்தியை முன்னமே அறிந்து எதிர்நோக்கி வனத்திலுள்ள நல்ல கனிகளைச் சேமித்து வைத்துக் கொண்டிருக்கிறாள். ராம லட்சுமணர் ஆசிரமத்துக்கு வந்ததும் பழங்களை அவர்களுக்கு அளித்து உபசரிக்கிறாள். பல வேறு கனிகளையும் ருசி பார்த்து இனியவற்றைத் தேர்ந்தெடுத்து ராமனுக்காக வைத்திருக்கிறாள். சவரி ருசி பார்த்துப் பார்த்து ராமனுக்குக் கனிகளைக் கொடுத்துக் கொண்டிருந்ததாகவும் கதை வளர்ந்திருக்கிறது, சவரியின் பக்திக் காதலையும் பெருமையையும் வற்புறுத்திக் காட்டுவதற்காக.

பேரனும் பாட்டியும்

சவரி வசித்துவரும் மதங்காசிரமம், காடும் மலையும் கடந்து களைப்புற்று வந்த ராம லட்சுமணருக்குப் பூலோகமென்றே தோன்ற வில்லையாம். மதங்காசிரமம் என்ற சோலையானது,

எண்ணிய இன்பம் அன்றித்
துன்பங்கள் இல்லை யான
புண்ணியம் புரிந்தோர் வைகும்
துறக்கமே போன்ற தன்றே!

[வைகும் — தங்கும். துறக்கம் — சுவர்க்க லோகம்.]

கற்பகச்சோலை போலத் தோன்றுகிறது மரங்களும் செடி கொடிகளும் அடர்ந்துள்ள மதங்காசிரமம். உள்ளம் விரும்புகின்ற இன்பத்திற்கெல்லாம் உறைவிடமாகத் தோன்றுகிறதாம். 'இங்கே துன்பங்களே இருக்க முடியாது!' என்றும் எண்ணத் தோன்றுகிறதாம். சவரி என்ற தவப் பெண் ஒருத்தி இங்கு வசிப்பதே எத்தனையோ புண்ணியர்கள் வசிப்பது போலத் தோற்ற மளிக்கிறதாம்.

மதங்காசிரமத்தை யடைந்ததும் ராமன் சவரியை அணுகி க்ஷேமம் விசாரிக்கிறான். இந்தத் தவப் பெண் செய்யும் தவமெல்லாம் ராமனுடைய நினைப்பேதான், தியானம் தான். ராமனையே எல்லாவற்றுக்கும் மூலமான பரம்பொருளாக தியானித்துக் கொண்டிருக்கிறாள் சவரி. ராமன் இனிய வசனங்கள் சொல்லி, 'நீ தீதின்றி க்ஷேமமா யிருக்கிறாயா?' என்று பேரன்புடன் விசாரிக்கிறான், பேரன் பாட்டியை க்ஷேமம் விசாரிப்பது போல:


அன்னதாம் இருக்கை நண்ணி,
ஆண்டுநின்(று) அளவில் காலம்
தன்னையே நினைந்து நோற்கும்
சவரியைத் தலைப்பட்(டு), அன்னாட்(கு)

இன்னுரை அருளித் 'தீதின்(று)
இருந்தனை போலும்?' என்றான்,
முன் இவற்(கு) இது என்(று) எண்ணா—
லாவதோர் மூலம் இல்லான்.

[அன்னதாம் — அப்படிப்பட்டதான. ஆண்டு நின்று — அந்த இடத்தில் இருந்துகொண்டு. அளவில் காலம் — (இங்கே) பல காலமாக. நோற்கும் — நோன்பு அல்லது தவம் புரியும். தலைப்பட்டு - அணுகி. அன்னாட்கு — அவளுக்கு. முன் இவற்கு — இவனுக்குமுன்.]

அப்போது சவரி ராமனைப் புகழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றாள். 'உன்னுடைய தரிசனத்தால் என் மாயப் பாசம் போயிற்று; என் தவம் பலித்துச் செல்வம் வந்தது; புண்ணியம் பூத்தது' என்று குதூகலமாய்ச் சொல்லிவிட்டு, ஏற்கெனவே விரும்பிச் சேர்த்து வைத்திருந்த கனிகள் முதலியவற்றைக் கொணர்ந்து விருந்து செய்கிறாள், பேரனுக்குப் பாட்டி ஊட்டுவது போல:

தியாக அரசும் தவ அரசியும்
விருந்துண்ட பின் ராமன்,
அருந்தவத்(து) அரசி தன்னை
அன்புற நோக்கி, 'எங்கள்
வருந்துறு துயரம் தீர்த்தாய்
அம்மனை! வாழி' என்றான்.



[வருந்துறு துயரம் - வருத்தம் பொருந்திய வழி நடந்த துன்பம். அம்மனை - தாயே.]

வேடச்சியானாலும் அருந்தவத்து அரசியல்லவா? தியாக அரசாகிய ராமன் இவளைத் 'தாயே!' என்று அழைத்து வாழ்த்துகிறான்.

சவரி இவர்களை மெய்யன்போடு நோக்கி, சுக்கிரீவன் இருக்கும் இடத்திற்கு வழி காட்டுகிறாள்:

துனைபரித் தேரோன் மைந்தன்
இருந்தஅத் துளக்கில் குன்றம்
நினைவரி(து) ஆயற்(கு) ஒத்த
நெறியெலாம் நினைந்து சொன்னாள்.

[துனை பரி-வேகமாய்ச் செல்லும் குதிரைகள். துனை பரித் தேரோன்-சூரியன். தேரோன் மைந்தன் - சுக்கிரீவன். துளக்கில் - அழிவற்ற. நினைவு அரிது - நினைக்க முடியாததும். ஆயற்கு ஒத்த - ஆராயத் தக்கதும் ஆன. நெறியெலாம் - வழி முழுவதும்.]

பக்தையா, ஆசிரியையா?

சுக்கிரீவன் தங்கியிருந்த குன்றுக்குத்தான் வழி சொன்னாள் சவரி; அந்தக் கஷ்டமான பாதையைத்தான் காட்டினாள். ஆனால் ராமன் அதை எவ்வளவு ஜாக்கிரதையாகக் கேட்டான், தெரியுமா? நல்லாசிரியர் நற்கதி பெறுவதற்கு வழி காட்டி உபதேசிக்கும்போது உய்ந்து போக விரும்புகிறவர்கள் எவ்வளவு கவனத்துடனும் ஒருமையுள்ளத்துடனும் கேட்பார்களோ அப்படிக் கேட்கிறானாம் சவரி சொன்னவற்றையெல்லாம்.

சவரி வெளிப்படையாக ராமனுக்குச் சுக்கிரீவன் வசிக்கிற மலைக்கு வழி காட்டுகிறாள். ராமனோ குறிப்பாக க்ஷேமம் விசாரிப்பது போல் இவளுக்கு முக்திநெறி காட்டி விடுகிறானாம். பாட்டி பக்தையாகிறாள்; பேரன் பரமனாகிறான். சவரி தன் தவப்பயனால் பெற்றிருந்த யோக சக்தியால் உடல் துறந்து ராமனருளால் பெற்ற பேற்றினால், பரமபதம் சேர்கின்றாள்.

ராம லட்சுமணர்கள் இந்த யோக மகிமையையும் இவளுடைய பக்தியையும் கண்டு அதிசயித்த வண்ணம்,

பொன்னடிக் கழல்கள் ஆர்ப்ப,
புகன்றமா நெறியில் போனார்.

[பொன்னடிக் கழல்கள் — தங்கள் கால்களில் கட்டிய பொன்னாலான வீரக்கழல்கள். ஆர்ப்ப — ஒலிக்கும்படி. புகன்றமா நெறியில் — சவரி சொன்ன பெரிய காட்டு வழியில்.]

ராம லட்சுமணர் காடுகளும் குன்றுகளும் கடந்து பம்பைப் பொய்கையை அடைகின்றார்:

புண்ணியம் உருகிற்றன்ன
பம்பையாம் பொய்கை புக்கார்.

[உருகிற்று அன்ன — உருகினது போலத் தோன்றும். பொய்கை — மனிதர் ஆக்காமல் இயற்கையாக அமைந்துள்ள நீர் நிலை.]



312. 'ஆரணிய'த்தில் கம்பன்

ஒருவன் காடு பார்க்கப் போய் மரங்களை மட்டும் பார்த்து விட்டு வீடு திரும்பினான் என்று சொல்வதுண்டு. காடு பாராமலே மரங்களைப் பார்த்து வந்து விட்டானாம். இவனுடைய வீட்டுத் தோட்டத்திலும்தான் மரங்கள் இருக்கின்றன. ஊர்ப்புறத்தில் பலவேறு மரங்களும் உண்டு. 'இப்படித் தானே காட்டிலும் மரங்கள் இருக்கின்றன' என்று இவன் கருதினால் சரி யாகுமா? காட்டு மரங்களை இவன் பார்த்து வந்த செய்தியைக் கேள்விப் படுகிறவர்களும் காடு தெரியாதவர்களா யிருந்தால், 'ஏதோ ஒரு தோப்பு அல்லது தோட்டம் போன்றது காடு'. என்று தானே எண்ணக் கூடும்? இதுதான் பொதுவாகக் கம்பராமாயண காலட்சேபக்காரர் அல்லது கம்ப ராமாயணப் பிரசங்கிகளின் கதியும்.

ரசனைச் சுவை

இவர்கள் சிற்சில பாடல்களின் அழகை விஸ்தரிப்பதுடன் திருப்தி யடைகிறார்கள். சில வேளைகளில் ஒரே செய்யுளின் விளக்கம் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தையும் விழுங்கி விடுகிறது. இத்தகைய பிரசங்கிகள் வாயிலாகக் கம்ப ராமாயணம் கேட்டிருந்த தலை சிறந்த வழக்கறிஞர் ஒருவர், 'கம்பன் மகா கவிதான். ஒவ்வொருவருடைய குணத்தையும் நன்றாக அறிந்து தவறாமல் அமைத்திருக்கிறான். அவனுடைய வருணனைகள் அளவுக்கு மிஞ்சிப் போய் விடுகின்றன. எல்லாம் ரசமாகவே இருக்கின்றன. ஆனால் பத்துப் பாடல்கள் இருக்க வேண்டிய இடத்தில் நூறு பாடல்களைப் பாடி விடுகிறான். அங்கே தெவிட்டிப் போகிறது' என்று தமிழகத்தின் தலைசிறந்த பதிப்பாசிரியரிடம் தெரிவித்தாராம்.

'அதிலுள்ள செய்யுட்களை நான் சில முறை அவரிடம் எடுத்துக் கூறி மகிழ்வித்திருக்கிறேன். வேறு சிலர் வாயிலாகவும் அவர் கேட்டிருக்கிறார்... அவருடைய வேகமான புத்திக்கு அந்த நீண்ட வருணனையைப் படித்து அனுபவிக்கும் பொறுமை இருப்பதில்லை' என்று மேலேகுறித்த பதிப்பா



சிரியர் கூறியுள்ளார். இந்த இரண்டு அறிஞர்களிடத்திலும் எனக்குப் பெருமதிப்பு உண்டு. எனினும் கம்பனுடைய ரசனைச் சுவையை நேரில் ஆராய்ந்து அனுபவிக்க அவகாசம் பெருததால் தான் அந்த 'வேகமான புத்தி' அப்படிப் 'பொறுமை' இழந்ததென்பது என் அபிப்பிராயம். கம்பனுடைய ரசனைச் சுவையை உள்ளவாறு ஆராய்ந்து அனுபவித்திருக்கும் விமர்சன அறிஞர்கள் மேலே சொன்ன அறிஞர்களின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதை இங்கே பணிவுடன் தெரிவிப்பது நீண்ட காலமாய்க் கம்பராமாயண மாணுக்கனுக இருந்து வரும் என் கடமை என்றே கருதுகிறேன்.

இத்தகைய விமர்சன அறிஞர்களில் சிறந்தவரான ஆசிரியர் வ. வெ. சு. ஐயர், 'ராமாயணத்தின் அழகை விஸ்தரிக்கிறவர்கள் ஒவ்வொரு பாகத்தின் அழகை, சிற்சில வேளைகளில் ஒவ்வொரு செய்யுளின் அழகைத்தான் எடுத்துக் காட்டுகிறூர்கள்' என்று கூறி, 'கம்பராமாயணத்தில் உள்ள ரசனைச்சுவை மிகவும் உயர்ந்தது. ரசிகருடைய அறிவிற்கு அது அமுதமாக நிற்கின்றது. கம்ப ராமாயணத்தின் ரசனைச் சுவையை உணராமல் மற்றச் சுகங்களை மாத்திரம் உணர்கின்றவர்கள் அதன் சுவையில் செம்பாதிக்கு மேல் இழந்து விடுகிறூர்கள்' என்கிறூர்.



காவியப் பூங்கோயில்

கம்பராமாயணத்தை ஒரு சிற்பியால் அமைக்கப்பெற்ற அரண்மனை யாகக் கொண்டு ஒவ்வொரு பகுதிக்கும் மற்றப் பகுதிகளுக்கும் உள்ள இசைவையும், கட்டடப்பகுதிக்கும் மொத்த அமைப்புக்கும் உள்ள இசை வையும் உற்று நோக்குவோரே, 'வருணனைகள் பொருத்தமா யிருக் கின்றனவா? அல்லது அளவுக்கு மிஞ்சிப்போய் விடுகின்றனவா?' என்பதை உள்ளவாறு கண்டுகொள்ள முடியும். மேலும் கம்பனுடைய காவிய அரண்மனையின் பேரழகை 'இடைச் செருகல்' என்ற குப்பை கூளங்களும் ஒருவாறு மறைத்து விடுகின்றன.

இந்த நிலையிலும் ஆசிரியர் வ. வெ. சு. ஐயர் 'கம்பராமாயண ரசனை' என்ற ஓர் அருமையான விமர்சனக் கட்டுரை எழுதி, 'கம்பனை எப்படித் தெவிட்டாது அனுபவிக்க முடியும்' என்பதற்கு ஒரு பெருவழி வகுத்திருக் கிறார். ஏறக்குறைய இதே வழியில் சென்று நமது வாசகர்களும் கம்பனை ரசித்து அனுபவிக்கவேண்டும் என்பது என் ஆசை. கவிதைப் பேரின்பத் துடன் இக்கவிஞன் காட்டும் பக்திப்பேரின்பத்தையும் அனுபவிக்க விரும்பு வோர் இந்தக் காவியத்தை ஓர் அரண்மனையாக நோக்குவதுடன் ஒரு காவி யப் பூங்கோயிலாகவும் நோக்கி நோக்கி ஆனந்த மடைவர்.

ராமாயணத்தின் தனிப்பெரு நிகழ்ச்சி ராவண வதம் — அதாவது ராவண வதத்தால் ஏற்படும் உலகப் பெரு நலன். ராவண வதத்திற்கு நெருங் கிய காரணம் ஆரணிய காண்டத்தில் ஏற்படும் சீதாபஹரணம் (சீதையை அபகரித்தல்). ஆகவே இந்தக் காண்டத்தை ராமாயணத்தின் மத்திய பாகம் அல்லது இருதயப் பிரதேசம் என்று சொல்ல வேண்டும். ராமாயணம் என்ற கட்டடத்தில் ஆரணிய காண்டம் நடுநிலை மாடம்.

அயோத்தியா காண்டத்திலேதான் ராமாயணக் கதை உள்ளபடி ஆரம்ப மாகிறது. ஆரணிய காண்டத்தில் ஏற்படும் சீதா ராவண சந்திப் பிற்கு விதை விழுவது அயோத்தியா காண்டத்திலேதான் — ராமன் சீதையுடன் காட்டுக்குப் புறப்படுவதால் தான். சுந்தர காண்டத்திலே சீதையைத் தேடிக் கண்டு கொள்வதால் அக் காண்டம் விசேஷ அழகு வாய்ந்த மாடமாக அமைக்கப் பெற்றிருக்கிறது. கிஷ்கிந்தா காண்டம் கட்டடத் துடன் அவயவ சம்பந்தம் பெறாது ஒட்டியும் ஒட்டாம லும் இருக்கிறது. அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், சுந்தர காண்டம் என்ற இன்றி யமையாச முப்பெரு மாடங்க ளுடன் அமைந்திருக்கும் இந் தக் காவியப் பூங்கோயிலுக்குக் கோபுரமாக நிமிர்கின்றது கம் பனது யுத்த காண்டம். இந்தக் கோயிலுக்கு முன் வாசற் பூஞ் சோலைதான் பாலகாண்டம்.



ஆரணிய காண்டத்தின் அமைப்பு

சீதாபகரணம் நிகழும் ஆரணிய காண்டத்தின் ரசனை கம்ப ராமாயணத்தில் மிகவும் அழகாக அமைந்திருக்கிறது என்று காட்டுகிறார் வ. வெ. சு. ஐயர். 'சூர்ப்பணகையின் பிரவேசத்தி லிருந்து கம்பனுடைய ரசனை மேனாட்டுக் காவியங்களின் சுவையில் தோய்ந்தவருக்கும் கீழ்நாட்டுக் காவியங்களின் ரசத்தைப் பருகி அனுபவிப்பவருக்கும் 'சமமான இன்பத்தைத் தரும்' என்று சொல்லி இந்த ரசனையை விமர்சன நெறியில் விளக்குகிறார். 'சூர்ப்பணகையை அரங்கத்தில் தோற்றுவிக்கும் அழகை' வற்புறுத்தி இந்தப் படலத்தின் அமைப்பை நன்கு ஆராய்கிறார். சூர்ப்பணகை ராவணனைச் சந்தித்துச் சம்பாஷிக்கும்போது கவிஞன் காட்டும் 'அபூர்வமான திறமை'யையும் வற்புறுத்துகிறார். அவள் சீதையை வருணித்து ராவணனுள்ளத்தில் காமத்தைப் பயிர் செய்யும்போது அயோத்தியா காண்டத்தில் விழுந்த வித்து முளைகட்ட ஆரம்பித்து விட்டது என்கிறார்.

'ராவணனுடைய காம நோயை வருணிக்கக் கம்பன் 80 செய்யுள்கள் எழுதி யிருக்கிறான். இது அதிவர்ணனையே' என்று கருதும் விமர்சன ஆசிரியர் இதன் காரணத்தையும் பொறுமையுடன் கண்டு கொள்கிறார். கண்டுகொண்டு, 'ஆனால் கும்பகர்ணன் மாண்டும், இந்திரசித்தன் தலை யிழந்தும், மூலபலங்கள் மடிந்தும் அவியாத காமத்துக்கு இத்துணை விளம்பமான வர்ணனை வேண்டும் என்று கவி நினைத்திருக்கிறானென்று கொள்ள வேண்டும்' என்பர். இந்தப் பகுதியை 'அதிவர்ணனை' என்று இந்த விமர்சன ஆசிரியர் கருதுவதற்குச் செருகு கவிகளும் காரணமா யிருக்கலாம்.

மாய மான் விஷயமாக எழுந்த ராம லட்சுமண சம்வாதமும், சீதா லட்சுமண சம்வாதமும் எத்தகைய வேலைப்பாட்டுடன் எவ்வளவு ஜாக்கிரதையாக அமைக்கப் பெற்றிருக்கிறது என்பதை வற்புறுத்தி, சீதா ராவண சம்வாதத்தின் அருமை பெருமைகளையும் நுணுக்கமாய்ச் சுட்டிக் காட்டுகிறார். இக் காண்டத்திலுள்ள அதி முக்கியமான சந்தர்ப்பம் கம்ப ராமாயணத்திலே 'உருக்கி மாசுபோக்கி வார்த்த சொர்ண விக்கிரகம்' என்பது வ. வெ. சு. ஐயரின் கருத்து. ஆனால் இப்படி இதிகாசத்தை விமர்சனம் செய்து பார்ப்பதற்கு ரயிலுக்குப் போகும் வேகமோ, கோர்ட்டுக்குப் போகும் வேகமோ கூடாது.

* * * *

போகட்டும், ரசனையை மட்டும் இப்படியெல்லாம் பார்த்து விட்டால் 'ஆரணியத்தில்' கம்பனைக் கண்டு கொள்ளலாமா?' ரசனைச் சுவையுடன் கவிதைச் சுவையும் நன்கு உணரப்படும்போதுதான் ஆரணிய காண்டத்தில் கம்பனின் அரும் பெரு மேதையை உள்ளவாறு உணர்ந்து கொள்ள முடியும். இது குறித்து அடுத்த வாரம் பார்க்கலாம்.

சரி, ஒரு குரல் என் காதில் விழுகிறது: ஆரணியத்தைக் கம்பன் பார்த்திருக்கிறானா?—சரியாக, இயற்கையாக வருணித்திருக்கிறானா? இந்த வினாவை அடுத்த கட்டுரையின் முகப்பிலேயே ஆராய்ந்து விடை காண முயல்வோம்.



பி. ஸ்ரீ.

313. காடும் கவிதையும்

'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்று பொதுவாய்ச் சொல்வதிலிருந்து 'கம்பன் இயற்கை வருணனைக் கவி அல்ல, கற்ற கல்வியைக் கொண்டு சப்த ஜாலங்களால் காணாததெல்லாம் கண்டது போல வருணிக்கிறான்' என்று கம்பனைச் சரியாகக் கற்க முயலாத சிலர் தவறாகக் கருதுகின்றார். ஆனால்,

பிழியும் தேனிற்
பிறங்(கு)அரு வித்திரள்
பொழியும் சோலை
விரைவினிற் போயினார்

[பிறங்கு அருவி – விளங்குகின்ற அருவி.]

என்று அகஸ்திய ஆசிரமம் இருந்த சோலையை வருணிக்கின்றவன் குற்றால மலைக் காடுகளையும் அருவிகளையுமாவது பார்த்திருக்க வேண்டுமல்லவா?

நின்ற நதிகளும், மலைத்தொடர்களும்

ஜடாயு இருந்த வனத்திற்குப் போகும் வழியில் ஆறுகளையும் அருவிகளையும் மலைத் தொடர்களையும் ராமலட்சுமணர் விரைவில் பார்த்துக் கொண்டே போனார்கள். அந்தக் காட்சிகளைப் பின்வரும் சிறிய செய்யுளில் நாமும் பார்க்கிறோம், 'பேசும் பட'க் காட்சிகள் பார்ப்பது போலே:

நடந்தனர் காவதம்
பலவும்; நன்னதி
கிடந்தன, நின்றன;
கிரிகள் கேண்மையின்
தொடர்ந்தன, துவன்றின —
சூழல் யாவையும்
கடந்தனர்; கண்டனர்
கழுகின் வேந்தையே.

[காவதம் – காதம். கேண்மையின் – நட்புக் கொண்டாற் போல. துவன்றின – நெருங்கி யிருந்தன. சூழல் – (இத்தகைய) காட்டிடங்கள்.]





‘நின்ற நதிகள்’ என்ற அருவிகளை வருணிக்கும் கவிஞன் அருவிக் காட்சிகளை நின்று நின்று பார்த்துப் பார்த்து அனுபவித்திருக்க வேண்டுமல்லவா? ‘நண்பர்கள் போல் நெருங்கித் தொடர்கின்றன மலைத் தொடர்கள்’ என்ற வருணனையைத் தான் பாருங்கள்.

இயற்கையுடன் கொஞ்சும் தமிழ் (சிறப்பியல்பு)

பஞ்சவடியை அகஸ்தியர் வாயிலாக வருணிப்பதைத் தான் பாருங்கள்:

ஓங்குமரன் ஓங்கி,மலை
ஓங்கி,மணல் ஓங்கிப்
பூங்குலைகு லாவுகுளிர்
சோலைபுடை விம்மித்
தூங்குதிரை ஆறுநவழ்
சூழலதோர் குன்றின்
பாங்கருள தால்உறையுள்
பஞ்சவடி, மஞ்ச!

[மரன் — மரம். தூங் குதிரை — தொங்குவது போலத் தோன்றும் அலைகள். சூழலது — சுற்றிடங்களை உடையது. ஓர் குன்றின்—ஒரு குன்றின். பாங்கர் — அருகே. உறையுள் — உறைவிடம். மஞ்ச — மகனே.]

ஓங்குமரன் ஓங்கி,மலை
ஓங்கி,மணல் ஓங்கி

என்றதும், செங்கற் சுண்ணம்பு மாடங்களிலும் சிமிட்டிச் சுண்ணம்பு மாளிகைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் நம் உள்ளங்கள் விடுதலை பெற்று மனம் ஒக்க மலை ஓங்கும் ‘இயற்கை யாண்மனை’களில் சுதந்திரமாகச் சஞ்சரிப்பது போன்ற ஒரு மகத்தான உணர்ச்சி எற்படவில்லையா?

அகண்ட கோதாவரிக் கரையில் பஞ்சவடியைப் பாராமலிருக்கலாம். கம்பனின் பஞ்சவடிக் காட்சி, காவிரி தீரத்திலேயே கம்பன் கண்ட இயற்கைக் காட்சியாக இருக்கலாமே:

கன்னி இள வாழைகனி
ஈவ, கதிர் வாலின்
செந்நெல் உள; தேனொழுகு
போதும் உள; தெய்வப்
பொன்னியென லாயபுனல்
ஆறும் உள; போதா,
அன்னம் உள பொன் இவளொ-
டன்பின்விளை யாட.

[ஈவ — தருவன. போது — மலர். பொன்னி — காவிரி. புனல் — (வற்றாத) நீர். போதா — பெருநாரை.]

இயற்கை வருணனை யென்றால் உள்ளது உள்ளபடி ஒன்றைவிடாமல் சொல்லிப் புகைப்படம் பிடித்துக் காட்டுவதன்று. அங்கங்கே கூறப்படும் பொருள் பொதிந்த சிறு விவரமே (significant detail) இயற்கை வருணனைக்கு உயிர் தருவது. இந்த முறையில் கம்பன் இயற்கை வருணனைகள் செய்யும் ஆற்றல் பெற்றவன் தான்: ஆனால் இது அன்று கம்பன் கவிமாட்சி.

அன்னம் உள பொன் இவளொ-
டன்பின்விளை யாட

என்று அகஸ்தியர் சொல்லுகிறாரே பஞ்சவடி - அழகுகளில் சீதைப் பெண்ணின் தேவையையும் மறந்து விடாமல்,—சீதைக்கு விளையாட்டுத் தோழியும் அங்கே உண்டு என்கிறாரே, — இப்படிப் பொருள் பொதிந்த சிறு விவரமாக மக்களுணர்ச்சிகளை வெளியிடுவது கம்பனின் சிறப்பியல்புகளில் ஒன்று.

மனித உணர்ச்சிகள் ஆடி விளையாடும் நாடக அரங்குதான் இயற்கை நம் கவிஞனுக்கு. அந்தி மயங்கி இருள் படா அருவிகளோடு கூடிய மலைக் காடு எப்படித் தோன்றுகிறது — ராமன் மனைவியைப் பிரிந்து ஜடாயுவையும் இழந்து பரிதவிக்கும் நிலையிலே! பாருங்கள்:



தேனுக அருவி சிந்தித்
தெருமரல் உறுவ போலக்
கானமும் மலையும் எல்லாம்
கண்ணினீர் உகுக்கும்
கங்குல்.

[உக-வழிய. தெருமரல் உறுவ போல-சோகம் அடைவனபோல. கங்குல் — இரவு.]

ராம லட்சுமணர்களுடன் காடும் மலையும் ' ஸமதுக்கி 'களாய்க் கண்ணீரைத் தான் அப்படி அருவிகளாய்க் கொட்டுகின்றனவாம். இப்படி யெல்லாம் வருணிப்பது சிறப்பியல்பு, தனியழகு — கம்பன் கவிமாண்பு.

மகோன்னத வாக்கு

'மகோன்னதமான கவிதையின் லட்சணத்தைச் சுருக்கமாகச் சொல்வதானால், அது மனிதனுடைய அறிவை விவகார உலகத்தினின்று தட்டி யெழுப்பி அதற்கு அகண்ட உணர்ச்சியை உண்டாக்க வேண்டியது' என்பர் ஆசிரியர் வ. வெ. சு. ஐயர். இதற்கு ஆரணிய காண்டத்திலிருந்தே உதாரணங்கள் காட்டலாம்.

கவிதை — யிலக்கணத்தைக் கொண்டு கம்பனைப் போன்ற உலக மகா கவிகளை அளக்க முயல்வது கூடச் சரியன்று. 'புதிய கவிகளின் யோக்கியதையைத் தெரிந்து கொள்ள நமக்கு உரைகல்லாக இருக்கக் கூடியவை உலக மகாகவிகளின் வாக்குகளே' என்பர் ஆங்கில விமர்சகரான மாத்யூ ஆர்னல்ட். இத்தகைய 'மகாகவி வாக்குக்களில் எழெட்டு நம் காதில் எப்போதும் ஒலித்துக்கொண்டே வந்தால் நாம் எப்பேர்ப்பட்ட கவிகளையும் நேர்சீர் பார்த்து விடலாம்' என்று கூறுவதுண்டு. இப்பேர்ப்பட்ட கவிதையுலகின் எழெட்டு மகாவாக்கியங்களையும் கம்பனிலிருந்தே தமிழன் தேர்ந்தெடுக்கக்கூடும். ஏன், இந்த ஆரணிய காண்டத்திலிருந்தே தேர்ந்தெடுக்க முடியும் என்றுகூடத் தோன்றுகிறது. உதாரணமாக ஒன்று பார்க்கலாம்.

சூர்ப்பணகையை முதன் முதல் வாசகருக்கு அறிமுகப்படுத்தும் மகா வாக்கியம் இது:

நீலமா மணிநிற
    நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற
    முடிக்கும் மொய்ம்பினாள்.

[நிருதர் — அரக்கர். மொய்ம்பினாள் — வலிமையுள்ளவள்.]


இதன் வேகம் ஆரணிய காண்டத்தையும் கடந்து அப்பாலும் இப்பாலும் செல்லுகிறது. சூர்ப்பணகையோ ஆரணிய காண்டத்தினிடையே தோன்றி இடையே மின்னல் போலே மறைந்து போகிறவள்.

'பொல்லாத மைத்துனனைக்
    கொன்றாய்'என் றதுகுறித்துக்
    கொடுமை சூழ்ந்து,
பல்லாலே இதழ்அதுக்கும்
    கொடும்பாவி நெடும்பாரில்
    பழிதீர்ந் தாளோ?

[சூழ்ந்து — சூழ்ச்சிசெய்து. அதுக்கும்—கடிக்கும். பாரில்—பூமியில்.] என்று, ராவணன் இறந்தபின் விபீஷணத்தம்பி கதறுவதைக் கேளுங்கள். சூர்ப்பணகையின் கணவனைத் திக்விஜய காலத்தில் போரிலே கொன்று விட்டான் ராவணன். அதற்காகச் சூழ்ச்சிசெய்து அண்ணனை மூலநாசம் பெற முடித்துவிட்டாளோ? — என்று அலறுகிறது விபீஷண ஹிருதயம்.

* * * *

இத்தகைய உணர்ச்சிக் காடுகளின் முன் வாசற் சோலைதான் காடும் இக்கவிஞனுக்கு.



சித்ரலேகா

314. ஒட்டியும் ஒட்டாமலும்

தாஜ்மஹால், இமயமலை, உபநிஷதம் இம்மூன்றும் இந்தியாவின் சிறப்பு என்று கூறுவதுண்டு. காந்தியடிகளையும் சேர்த்து 'இந்நான்கும் தற்கால இந்தியாவின் பெருமை' என்று பேசினார் ஓர் அறிஞர். நாம் தமிழகத்தின் சிறப்பை உலகறியச் செய்யும் அம்சங்களாக நமது சிற்பச் செல்வமான கோயில்களையும், காவியப் பூங்கோயிலாகிய கம்பனையும் சுட்டிக் காட்டலாம்.

'இமயமலை இல்லையே தமிழ் நாட்டில்' என்று ஒரு குறை சொல்லக் கூடும். ஆனால், கம்பனுடைய காவியக் கோயிலை அகக்கண் கொண்டு பாருங்கள். இக்காவியத்தின் 'காம்பீரிய'த்தை உற்றுநோக்கும்போது, 'பனிசூடி வானளாவி வளர்ந்து நிற்கும் இமயமலைச் சிகரம்தான் இவ்வளவு கம்பீரமாய்க் காட்சி வழங்க முடியுமா?' என்றே எண்ணத் தோன்றுகிறது. காந்தியடிகள் போன்ற சத்திய வீர புருஷனையும் நாம் இந்தக் காவிய மாளிகையில் காணத்தான் செய்கிறோம். காவிய நாயகனாகிய ராமனைத்தான் கம்பன் இப்படி உயர்த்தி விட்டான் என்பதில்லை. ராவண சகோதரனாகிய விபீஷணனையே சத்தியாக்கிரக சிரேஷ்டனாக்கி ராமனுக்கு மிகவும் பிரியமான சகோதரனாக்கியும் காட்டுகிறது தமிழ்க் கவிஞனின் மேதை.

அரண்மனையா, கோயிலா?

வால்மீகி தந்த ராம கதையைக் கொண்டு தமிழ் மக்களின் வாழ்வையும் பண்படுத்திப் பெருவாழ்வாக்க வேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்ட கவிஞன், அந்த அடிப்படை மீது தன் காவியக் கோயிலைக் கட்டுகிறான். வால்மீகி—கதையின் போக்கிலும் ஸாராம்சத்திலும் மாறுபடாமலே, காண்டங்களின் பெயர்களைக்கூட மாற்றிவிடாமலே, ஒவ்வொரு கட்டத்தையும் தன் புதிய காவிய அமைப்பிற்கேற்ப மாற்றி

அமைத்துக் கொண்டே போகும் கம்பன், வால்மீகியின் நல்ல அஸ்திவாரத்தைத்தான் மேலும் உறுதிப்படுத்திக் கொள்கிறான். உறுதிப்படுத்திக் கொண்டு தன் கோயிலைக் கட்டி நிறுத்துகிறான்.

பாரதியார் ஒரு சபா மண்டபத்தை வருணிக்கிறார்:

வல்லவன் ஆக்கிய
சித்திரம் போலும்,
வன்மைக் கவிஞர்
கனவினைப் போலும்,
நல்ல தொழில்உணர்ந்-
தார்செயல் என்றே
நாடு முழுதும்
புகழ்ச்சிகள் கூறக்,
கல்லையும் மண்ணையும்
பொன்னையும் கொண்டு
காமர் மணிகள்
சிலசில சேர்த்துச்
சொல்லை இசைத்துப்
பிறர்செயு மாறே
சுந்தர மாமொரு
காவியம் செய்தார்.

கல்லையும் மண்ணையும் பொன்னையும் மணியையும் கொண்டு கைதேர்ந்த சிற்பி மனோகரமான மாளிகை அமைப்பதுபோல், மகாகவியும் தன் சொல்லை இசைத்துச் சுந்தரமான காவிய மாளிகையை நிர்மாணஞ் செய்கின்றான். கவிச்சிற்பமாகிய மகா காவியமும் ஒரு மாளிகையாக அமைதல் வேண்டும். கற்குவியல் கட்டடமாகுமா?— தனிக் கதைகள் அல்லது உபாக்கியானங்களின் சேர்க்கையும் காவியமாகாது. கட்டடங்களில் எத்தனை வகைகள்! அப்படியேதான் காவிய மாளிகைகளும் கவிஞர் பெருமக்களின் மனோபாவத்திற்கு ஏற்றவாறு பலவகையாக நிர்மாணஞ் செய்யப் பெறுகின்றன. மனை அல்லது மாளிகை என்னும் பெயருக்குரிய மரபுகள் மட்டும் போதுமா? சிற்பத்-திறனோடு அழகு-விதிகளுக்கு இசைய அமைக்கப் பெறும் கட்டடங்களே நம்முடைய சௌந்தரிய உணர்ச்சிக்குத் திருப்தி தருகின்றன. இப்படியே ரஸிகாது நல்லுணர்ச்சிக்கு இசைந்து அமையும் காவியமே காவிய மாளிகை. கம்பனுடைய காவிய மாளிகையைக் காவிய அரண்மனையென்று சொன்னால்கூடப் போதாது.

செய்யுள்போல் செய்த
திருக்கோயில்

என்றார் ஒரு தமிழ்க் கவிஞர். கம்பனுடைய காவிய மாளிகையைத் தென்னாட்டுத் திருக்கோயில்களுக்கிடையே எழுந்த ஒரு மகா காவியத் திருக்கோயில் என்று கருதலாம்.

அழகனுக்குப் பூங்கோயில்

'திருக்கோயில்' என்று பக்தியுணர்வுடன் சொல்வதைக் காட்டிலும் 'பூங்கோயில்' என்று சௌந்தரிய உணர்ச்சியுடன் கூறுவதே ரஸிகருக்குத் திருப்தி யென்று கருதுகிறேன். வால்மீகியின் உத்தம புருஷனைப் புருஷோத்தமனுக்கி அவதார மூர்த்தியாக்கியும், கம்பன் அழகனுகவே சிறப்பித்து வழிபடுகின்றான் காவிய நாயகனைத் தன் காவியக் கோயிலிலே.

கண்டனன் என்ப மன்னோ
கதிரவன் சிறுவன், காமர்
குண்டலம் துறந்த கோல
வதனமும், குளிர்க்கும்
கண்ணும்,
புண்டரி கங்கள் பூத்துப்
புயல்தழீஇப் பொலிந்த
திங்கள்—
மண்டலம் உதயம் செய்த
மரகதக் கிரிஅன் னானை

[என்ப — என்று கூறுவர் பெரியோர். மன்னோ — அசை. கதிரவன் சிறுவன் — சூரிய புத்திரனாகிய சுக்கிரீவன். காமர் — (இங்கே) செயற்கையழகு. கோலம் — இயற்கை யழகு. குளிர்க்கும் — குளிர்விக்கும். புண்டரிகம் — (இங்கே) செந்தாமரை. புயல் தழீஇ — நீலமேகம் தழுவி.]

என்று சுக்கிரீவன் பார்க்கிறானே, அதுதான் கம்பனுக்கும் முதன் முதல்

கிடைத்த வீர சௌந்தரியக் காட்சி. இந்த வீர சுந்தரமூர்த்திக்குக் கல்லும் மண்ணும் காசும் இல்லாமல் கட்டிய



பூங்கோயில் தானே கம்ப ராமாயணம்?

லட்சிய அழகும்,
தெய்வ அழகும்

வீர சௌந்தரிய மூர்த்தி லட்சிய மூர்த்தியாகவும் காட்சி வழங்குகின்றான்.



நோக்கினான் நெடிது நின்றான்,
'நொடிவரும் கமலத்(து) அண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம்
அன்றுதொட்(டு) இன்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம்
குவிந்(து) இரு படிவம் ஆகி
மேக்குயர் தடந்தோள் பெற்று
வீரராய் விளைந்த?' என்பான்.

[நொடிவரும் கமலத்து அண்ணல் — பிரம்மதேவன். இன்று காறும் — இன்றுவரை. படிவம் — வடிவம். மேக்குயர் — மேலோங்கி வளர்ந்திருக்கும். தடந்தோள் — விசாலமான தோள். என்பான் — என்று சுக்கிரீவன் தனக்குள் தானே சொல்லிக் கொள்வான்.] என்று சுக்கிரீவனின் தனி மொழியாக வருவது கம்பனின் அபிப்பிராயம் தான்.

'கண்டனன்' என்பது ஸ்தூலக் காட்சியை, பிரத்தியட்சப் பார்வையை. 'நோக்கினான்' என்பது அகக் கண் நோக்கை, மனோபாவம் கலந்த பார்வையை. இனிமேல், 'தேறினான்' — அதாவது, தெளிவடைந்தானாம். சுக்கிரீவன் ஞானத் தெளிவு பெற்ற நிலையில் ராமனைத் தெய்வமாகவே அறிந்து கொள்கிறான்:

தேறினான், அமரர்க் கெல்லாம்
தேவராம் தேவர் அன்றே
மாறி இப் பிறப்பில் வந்தார்
மானுட ராகி மன்னோ!

[அமரர் — தேவர்கள்.]



சுக்ரீவனின் தெளிவு கம்பனின் ஞானத் தெளிவு தான். இந்தத் தெளிந்த காட்சியிலே, வீர அழகன் லட்சிய அழகனாகித் தெய்வ அழகனும் ஆகிவிடுகின்றான்.

மனிதனுக்கும் கவிதைக்கும் வெற்றி

இவனுடைய தோற்றம் மானுடத்தின் வெற்றி.

மானுடம் வென்றதன்றே

என்பது சுக்ரீவன் வாக்கு. கம்பனின் தேர்ந்த கொள்கை இது.

திருமால் மனிதனாய்ப் பிறந்ததால், பரம்பொருள் 'பிறவா யாக்கைப் பெரியோ'னாகிய சிவபெருமான் தான் என்று வாதாடினர் சைவர். மனிதனாய்ப் பிறந்த கருணையே திருமாலைப் பரம்பொருளாக்கி விட்டது என்று வழக்குரைத்தார் வைணவர். கம்பன் கவிதையோ 'வெற்றி விஷ்ணுவுக்கு மில்லை, சிவனுக்கு மில்லை; மனிதனுக்குத்தான், மானுடத்திற்குத் தான்!' என்று தெளிவாகத் தீர்ப்பளித்திருக்கிறது. (இந்த வெற்றி கம்பன் கவிதைக்கும் தான் என்பது ரஸிகர் தீர்ப்பு.)

கம்பனின் அவதார ரகஸ்யம் பக்தர்களோடு பகுத்தறிவாளர்களையும் திருப்தி செய்விக்கிறது. சுக்ரீவனின் கண்ணுக்கு ராமன் வீரன் தான், அழகனான வீரன், தியாக சௌந்தரிய வீரன். துறவு ராம சௌந்தரியத்தை அதிகப் படுத்துகிறது. இந்த வீரனைச் சுக்ரீவன் மனோபாவத்தால் நோக்கும் போது தான், லட்சியமூர்த்தியாகக் காண்கிறான். மேலும் தியானத்தில் மூழ்கித் தெளியும்போதுதான் அவதார மூர்த்தியாகக் காண்கிறான். இம் மூன்று நிலையும் ராமாயண வளர்ச்சி நிலைகள் எனப் பகுத்தறிந்து கொள்வதில் சிரமமில்லை.

உத்தம வீரசரித்திரமாக இருந்த ராமாயணம் காட்டிலுள்ள ஆசிரமத்திலிருந்து நாட்டிலுள்ள அரண்மனைக்கு வந்ததும் லட்சிய புருஷனின் சரித்திரமாகிறது. கடைசியாக மகாஜனங்களின் உள்ளம் புகுந்து புருஷோத்தமனின் அவதார சரித்திரமாகிறது. முனிவரின் சத்திய வீரன், லட்சிய அரசனாகி, மக்கள் - மனோபாவத்தில் . தெய்வ வீரனாகிறான். இந்தப் பகுத்தறிவு - வாதம் பக்திக்கும் பொருத்தமானதுதான். ஸ்தூலப் பார்வைக்குத் தியாக வீரன், ஞான நோக்கில் லட்சிய புருஷனாகி, ஞானத் தெளிவிலே தெய்வமாகி விடுகிறான்.

அவதாரம் குறித்துக் கவிஞனது இத்தனிப் பெருங் கொள்கையை வெளியிடும் கிஷ்கிந்தாகாண்டம், கம்பனது காவியப் பூங்கோயிலோடு அவயவசம்பந்தம் உடையதன்று; கட்டட அமைப்பிற்கு இன்றியமையாததன்று. எனினும் கட்டட அழகிற்கும் காவியப் பெருமைக்கும் இக் காண்டமும் உதவத்தான் செய்கிறது.

இது எப்படி என்பதை, இந்தக் காண்டத்தின் கதைத் தொடர்பை ஒட்டிப் பார்த்துக் கொண்டே போகலாம்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

315. பிரம்மசாரியின் காதல்

வளைந்து வளைந்து வரும் மலைப் பாதையில் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வருவது இவனுக்குத் தெரியும்; இவன் இருப்பது அவர்களுக்குத் தெரியாது.

முகத்திலே சோர்வு கண்டு, 'இவர்கள் அகத்திலே ஏதோ கொஞ்சம் துயரம் இருக்க வேண்டும்' என்று ஊகிக்கிறான். சாதாரணமான துன்பங்களால் கலங்கக் கூடியவர்கள் அல்ல என்பதும் புலனாகிறது. ஆனால் ஏதோ பறிகொடுத்துப் பரிதவிப்பதுபோல் காணப்படுகிறார்களே, அந்த முகத் தோற்றங்களின் பொருள்தான் என்ன?

'சரி, இவர்கள் உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருந்த ஏதோ ஒரு அபூர்வமான பொருளைப் பறிகொடுத்துத்தான் இவர்கள் இப்படித் தேடித் திரிந்து கொண்டிருக்க வேண்டும்' என்று உடனே ஊகஞ் செய்கிறான், ஒரு துப்பறி நிபுணன் போலே. அந்த ஒரே நோக்கம் அந்த முகங்களில் எப்படிச் சோர்வாய்ச் சோகமாய்ப் படர்ந்திருக்கிறது! அவர்கள் மெள்ள வந்து கொண்டேயிருக்கிறார்கள். இவன் மறைவாக இருந்து பார்த்துக் கொண்டேயிருக்கிறான்.



'என்ன வீர சௌந்தரியம், தயா சௌந்தரியம், என்ன காம்பீர்யம்! நன்மை என்ற பொருளையல்லாமல் வேறொன்றையும் நாடாதவர்கள், புன்மையை நினைவிலும் மறதியிலும் தீண்டாதவர்கள்' என்று முடிவுகட்டுகிறான்.

இப்படி ஆலோசனை செய்யும் பிரம்மசாரி மறைவாக இருந்து அந்த இளங்குமரர்களின் தவ வேஷத்தையும் ராஜ லட்சணங்களையும் தெய்விக மாட்சியையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துப் பார்த்து அதிசயிக்கிறான். ஆரம்பத்தில் ஏற்பட்ட சந்தேகம் விரைவில் ஒழிந்து விடுகிறது. உள்ளம் அன்பால் உருகுகிறது.

முன்னமே பிரிந்த பேரன்பர்களைத் திடீரென்று எதிர்ப்பட்டவனைப் போல நிற்கிறான். அந்த உருவங்களின் வசீகர சக்தி மேலும் அதிகரித்துக் காணுகிறது. அந்த மலைச்சாரலில் அப்படி வந்து கொண்டிருப்பவர்கள் இதுவரை இந்தப் பிரம்மசாரி இந்த உலகத்திலே கண்டிராத ரூப சித்திரங்கள், அழகுச் செல்வங்கள்! பிரம்மசாரிக்குக் காதலே பிறந்து விடுகிறது அந்தத் தெய்விக அழகினர் மீது!

இயற்கையும் தானும் காதலாகி!

அந்த மலைச்சாரலில் எத்தனை கற்கள் காலில் உறுத்தக் கூடியன—சூரிய வெப்பத்தால் சுட்டுக் கொதிக்கும் சரல் கற்கள். ஆனால் அவர்களுடைய கால் பட்ட மாத்திரத்தில் நெருப்புக் கொப்புளிக்கும் கற்களும் தேனைக் கொப்புளிக்கும் மலர்கள் போலத் தோன்று

கின்றனவாம். ஆம், அப்பொழுதுதான் மலர்ந்த புதிய பூக்களாக மாறிக் குளிர்ந்து கற்களும் மென்மையாகி விடுவதாகப் பிரம்மசாரி மனோபாவத்தால் காண்கிறான்.

இப்படியே அதிசயத்தில் மூழ்கியவனுக்கு அவன் கண்ட வேறு பொருள்களும் அவர்களுடைய வசீகர சக்திக்கு உட்படுவது போலத் தோன்றுகின்றன. நெஞ்சுருகி நெஞ்சுருகி நோக்கிக் கல்லும் புல்லும்கூட அவர்களுடைய சோகம் கண்டு, அழகு கண்டு, மோகங் கொண்டு உருகுகின்றனவோ என்று நினைக்கிறான்.

கய்எரி கனலும் கற்கள்
  கள்ளுடை மலர்க ளேபோல்,
தூயசெங் கமல பாதம்
  தோய்தோறும், குழைந்து
    தோன்றும்;
போயின திசைகள் தோறும்
  மரனொடு புல்லும் எல்லாம்
சாய்வுறும் தாழ்வ போல்;
    இங்(கு)
  இவர்களோ தருமம் ஆவார்?

[காய்எரி கனலும் கற்கள் — வெயிலில் காய்ந்து நெருப்பைக் கொப்புளிப்பதுபோலக் காணும் சாலைக் கற்கள். கள் — (இங்கே) தேன். தோய்தொறும்— பதியுந்தோறும். போயின திசைகள் தோறும் — வளைந்து வளைந்துபோன மலைவழிகளில் எல்லாம். மரன் — மரம். சாய்வுறும் தாழ்வபோல் — அவர்கள் பாதங்களில் மெள்ள வணங்குவன போல் சாய்கின்றன.]

பரிசுத்தமான செந்தாமரை மலர்கள் போன்ற பாதங்கள் பதியுந் தோறும் கல்லும் குழைந்து மலராகிறதாம்; புல்லும் சாய்ந்து அந்த மலரடிகளில் தாழ்ந்து வணங்குகிறதாம். புல் மட்டுமா? மரம் செடி கொடிகள் எல்லாம் இவர்கள் வரும் திசை நோக்கித் தலை சாய்த்து வணங்கி அவர்கள் போமிட மெல்லாம் மரியாதையாக விலகி ஒதுங்கி வழிவிடுகின்றனவாம். ‘தருமத்திற்கு உருவம் இருந்தால் இரண்டு உருவங்கள் இருக்கவேண்டும். அந்த உருவங்களும் இவர்களாகத் தான் இருக்கவேண்டும்’ என்று பாவசமாகிறான்.

வேடமோ தவவேடம்; இதற்கு விரோதம் கையில் ஏந்திய வில். சக்திமயமான தோற்றம்; இதற்கு விரோதம் முகத்திலுள்ள சோகக்குறி. அஞ்சத் தக்க சினத் தோற்றமுமில்லை. சாந்த சொரூபம், தயா சொரூபம், தரும சொரூபம். இவர்கள் இழந்த பொருளின் இரகசியம்தான் என்ன? மேலே பறக்கின்ற பறவைகள் இவர்கள் மேல் வெயில் படாமலிருக்க வேண்டுமென்றுதான் இப்படிச் சிறகு விரித்து நிழல் செய்து போகின்றனவோ?

வானம் மப்பு மந்தாரமாக இருப்பதால் வெயில் உறைக்கவில்லை. சில உச்சி மேகங்கள் சிறுசிறு திவலைகளையும் இப்போது தூற்றுகின்றன, பனிநீர் சிந்துவதுபோலே. ஆ, ஆ, ஆச்சரியம்! இவ்வளவு பக்திக் காதலுடன் பிரம்மசாரி,

‘மதனன் அஞ்சுறு வடிவர்

[மதனன் — மன்மதன்.]

—அதாவது, மன்மதனும் அழகுக்கு அஞ்சித் தோற்கும் பேரழகர்—என்று தான் கருதும் அவர்களை அருகே பார்த்ததும்,

என்பெனக்(கு) உருகு கின்ற(து),
  இவர்கின்ற(து) அளவில்காதல்,
அன்பினுக்(கு) அவதி யில்லை

[என்பு — எலும்பு. இவர்கின்றது — பாய்ந்து செல்லுகிறது. அளவில்—அளவில்லாத.]

என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான் பிரம்மசாரி - அனுமன். அவர்கள் ராமலட்சுமணர் என்று சொல்லவா வேண்டும்?

பக்தியா, காதலா ?

இத்தகைய பக்திக் காதலைக் கம்பனே வாழ்க்கையில் அனுபவித்திருக்க வேண்டும். காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலே வாழப் பெற்ற நாமும் ராமனைக் கண்ட அனுமன் அனுபவித்த பக்திக் காதலை ஒருவாறு அனுபவிக்க வில்லையா? காந்தி மகான் நடந்து வந்த பாதையே பாக்கியம் பெற்றது போலவும், மக்களோடு இயற்கையும் குழைந்து வழிபாடு செலுத்தியது போலவும் எனக்கே தோன்றியதுண்டு. இத்தகைய அனுபவம் அபூர்வமானதுதான். ஒரு மகரிஷி, ஒரு பக்தமணி, ஒரு பரம ஞானி, ஒரு யோகி, ஒரு பெருந் தியாகி இத்தகைய பக்தி அனுபவத்தை அளிக்கக்கூடும். கம்பனும் 'பெரியோர் சந்நிதி'யில் தான் அனுபவித்த இந்தப் 'பாக்கியத்தைச் சேமித்து வைத்துப்



பிறகு ராமாயணம் பாடும்போது உள் மனத்திலே ஒரு புதைபொருளாகக் கண்டு தக்க சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான். இந்த அபூர்வ அனுபவம் கம்பனுக்கு அனுமன் ராமனைத் தரிசித்த காட்சியை ஓர் ஆனந்தப் பகற்கனவாய்க் காட்டிவிடுகிறது.

'**காய்** எரி' என்று தொடங்கும் கவியைப் படித்துப் படித்து அனுபவிக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் பெரியாழ்வாரின் பாட்டொன்று ஞாபகத்திற்கு வருகிறது. கண்ணன் வேய்ங்குழல் ஊதிய சிறப்பினை வருணிக்கும் பாடல்களில் ஒன்று:

கருங்கண் தோகை மயிற்பீலி
அணிந்து,
கட்டிநன்(கு) உடுத்த பீதக
ஆடை
அருங்கல உருவில் ஆயர்
பெருமான்
அவனொரு வன்குழல் ஊதின
போது,
மரங்கள்நின் றுமது தாரைகள்
பாயும்;
மலர்கள்வீ ழும்; வளர்
கொம்புகள் தாழும்;
இரங்கும்; கூம் பும்; திரு மால்
நின்ற நின்ற
பக்கல்நோக் கிஅவை செய்
யும் குணமே!

[பீதக ஆடை - பீதாம்பரம். அருங்கலம் - ஆபரணம். கூம்பும் - குவியும்.]

குழலூதும் கோபாலனைக் கண்டு இயற்கையே வசீகரிக்கப்படுகிறது என்பது இப்பாட்டின் திரண்ட பொருள். இங்கும் தேன், மலர்கள், மரங்கள் எல்லாம் தாழ்ந்து இரங்கி வழிபடுவதைக் காண்கிறோம். ஆனால் இதைக் கற்று இந்த நினைவிலேதான் கம்பனும் பாடியிருக்கவேண்டும்; இங்கே இயற்கை மணம் வீசுகிறது, அங்கே கல்வி மணம் வீசுகிறது — என்றெல்லாம் விமர்சனம் செய்வது விபரீதம்தான்.

கரைகடந்த பக்திக் காதலில் இப்படிக் கரைந்து கொண்டிருக்கும் அனுமன் நின்று கொண்டிருந்த இடத்தை அவர்கள் நெருங்கிவர, இவனும் அவர்கள் கண்ணுக்குப் படும்படியாக வெளிப்பட்டு எதிர் சென்று, 'உங்கள் வரவு நல்வரவாகுக' என்கிறான், பெரும் பணிவுடன். 'நீ யார்?' என்று ராமன் கேட்க, அனுமன் பெருங்களிப்புடன் பதில் சொல்லுகிறான்:

'மஞ்செனத் திரண்ட கோல
மேனிய! மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி
நளிர்இரும் பனிக்குத் தேம்
பாக்
கஞ்சமொத்(து) அலர்ந்த
செய்ய
கண்ண!யான் காற்றின்
வேந்தற்(கு)
அஞ்சனை வயிற்றின் வந்தேன்,
நாமமும் அனுமன்' என்றான்.

[மஞ்சு—மேகம்; (இங்கே) நீலமேகம். கோல மேனிய — அழகிய மேனியையுடையவனே. நஞ்சு எனத் தகைய வாகி — (இங்கே) காதல் நோயைத் தோற்றுவிக்கும்படியாகி. நளிர் இரும் பனி — மிகவும் குளிர்ந்த பனி. தேம்பா— வாடாத. கஞ்சம் — தாமரைப் பூ. அலர்ந்த — மலர்ந்த. செய்ய — செம்மையான. கண்ண — கண்களையுடையவனே. காற்றின் வேந்தற்கு — காற்றின் தெய்வ அரசு அல்லது அதிதேவதையாகிய வாயு பகவானுக்கு.]

'நீ யார்?' என்று கேட்ட ராமனை நோக்கி, 'உன் மேனியை, உன் கண்ணைப் பார்த்தால் யாருக்குத்தான் ஆசை உண்டாகாது? பெண்கள் பார்த்தால் என்ன பாடு படுவார்கள்!' என்றெல்லாம் பீடிகை போட்டுப் பதில் சொல்லுகிறான் என்றால், இந்த நித்திய பிரம்மசாரிக்குத்தான் எவ்வளவு காதல் தோன்றி யிருக்க வேண்டும்!

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

316. இருவரும் ஏவலாளர்

வாயு புத்திரன் என்று தன்னை அறிமுகஞ் செய்துகொண்டவன், தான் வானர ராஜாவான சுக்கிரீவனுக்கு வேலைக்காரன் என்றும் வெகு விநயமாகத் தெரிவித்துக் கொண்டான். 'எங்கள் அரசன் இந்த மலையில் வாழ்கிறான். அவன் நீங்கள் வருவதைப் பார்த்து, "யாரென அறிந்து வா" எனக் கட்டளையிட வந்தேன்' என்றும் சொன்னான், பிரம்மசாரி வேடத்திலிருந்த அனுமன்.

சொல்லின் செல்வன்

சில சொற்களே பேசினான். சுருக்கமாக நல்வரவு கூறினான். பிறகு தன்னைத் தெரிவித்துக்கொள்ளும்போது ஒரே பக்திக் காதலில் மூழ்கிய வண்ணம் ராம சௌந்தரிய பரவசனானான். அப்பால்,

'இம்மலை யிருந்து
வாழும்
எரிகதிர்ப் பரிதிச்
செல்வன்
செம்மலுக்(கு) ஏவல்
செய்வேன்,
தேவ! நும் வரவு
நோக்கி
விம்மலுற்(று) அனையான் ஏவ,
வினவிய வந்தேன்'
என்றான்,
எம்மலைக் குலமும் தாழ
இசை சுமந்(து)
எழுந்த தோளான்.



[எரிகதிர்ப் பரிதிச் செல்வன் செம்மல் - சூரிய புத்திரனான சுக்கிரீவன். வினவிய - வினவும் பொருட்டு.]

பேசியது சொற்பமாயினும் இந்தப் பேச்சாளனைச் 'சொல்லின் செல்வன்' என்றே துணிகின்றான் வில்லின் செல்வனான ராமன். உண்மையில், ராமனுடைய தோற்றம் அனுமனை வசீகரித்தது போல் அனுமனுடைய ஆற்றலும் நிறைவும் அமைதியும் அறிவும் நிரம்பிய தோற்றமும் ராமனை வசீகரிக்கிறது. 'இவன் பேசும் சில வார்த்தைகளுக்குள்ளே தான் எவ்வளவு உயர்ந்த பண்பாடு!' என்று நினைக்கிறான் ராமன்.

'உலகமெங்கும் இவன் புகழ் பரவப் போகிறது. இப்போதுள்ள இந்த உலகத்தில் மட்டுமல்ல, இப்போது இல்லாத உலகத்திலும்—வேறு ஏதாவதொரு உலகத்தில் மக்கள் போய்க் குடியேறினால் அந்த உலகத்திலும்கூட — இந்த அனுமன் புகழ் பரவுமென்று தோன்றுகிறது' என அறிந்துகொள்ள வேண்டியதுதான். 'இந்த உலகத்தை விட்டு மக்கள் வேறு ஏதாவதொரு உலகத்தில் போய்க் குடியேறிய போதிலும், அந்த உலகத்திலும் மக்கள் இவன் புகழைப் பரப்பி விடுவார்கள் என்று தோன்றுகிறது' என்றெல்லாம்



ராமன், ஏதோ 'பகற்கனவு' காணும் கவிஞன் போல் பேசுகிறான் அனுமனது எதிர்காலம் குறித்து.

உடனே தீர்க்க திருஷ்டி சமீப திருஷ்டியாகி, அனுமனைக் 'கல்லாக் கலை'யாகிய கவிதையின் வடிவமாய்க் காண்கிறது. வேதக் கடலாகவும் காண்கிறது. இப்படி ஞான ஒளி வீசுகிறதாம்,— பிரம்மசாரியின் முக மண்டலத்தில் மட்டுமல்ல, அவனுடைய சில சொற்களிலும். ஸ்தூலம் கடந்து சூட்சும ஞான அழகை இப்படியெல்லாம் அனுபவிக்கும் ராமன், 'சொல்லின் செல்வமே இதுதான்' என்று தீர்மானிக்கிறான்.

இவ்விதமாகத் தன் உள்ளத்தில் பொங்கி வரும் உணர்ச்சிகளையெல்லாம் கொட்டுகிறான் ராமன் தம்பி மீது:

இல்லாத உலகத் தெங்கும்
  இங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
  கடலுமே என்னும் காட்சி,
சொல்லாலே தோன்றிற் றன்றே!
  யார்கொல்இச் சொல்லின்
                செல்வன்?
வில்லார்தோள் இளைய வீர!
  விரிஞ்சனோ, விடைவல் லானோ?

[இல்லாத உலகம் — இப்போது இல்லாமல் இனிமேல் குடியேறக் கூடிய உலகம். இங்கு இவன் இசைகள் கூர — இங்கே இருக்கிற இந்த அனுமனுடைய புகழ் நிறைய. கல்லாத கலை — 'கருவிலே திரு' என்று சொல்லும்படியே பிறவியோடு வந்த கவித்திறம் போன்ற கலைவளம். வேதக் கடல் — வேதம் முதலான நூல்களைக் கற்றுப் பெறுவதாகிய ஞானக்கடல். என்னும் காட்சி — என்று சொல்லக்கூடிய காட்சி. சொல்லாலே தோன்றிற்று அன்றே — (இவன் இப்போது பேசிய சில) சொற்களின் மூலமாகவே தோன்றிவிட்டன. வில் ஆர் தோள் — வில் பொருந்திய தோள். விரிஞ்சன் — பிரம்மதேவன். விடை வல்லான் — சிவபெருமான்.]

கம்பனுடைய அதிசயக் கவிதையில் ஒன்று இது. பக்தியில் மூழ்கி நின்ற அனுமன் முன்பு அதிசயத்தில் மூழ்கி நின்று ஆவேசமாய்ப் பேசும் ராமனை அப்படியே கண்டு காட்டும் பாட்டு இது. பாடிப் பாடிப் பரவசமாய்க் கண்டு கொள்ளுங்கள். கவிதையுலகின் அதிசயங்களில் ஒன்று.

ஆவேசம் தணிந்து இதயவசமாகப் பெற்ற ராமன், 'உன் அரசனைக் காணும் ஆசையால் வந்திருக்கிறோம்' என்கிறான். இதுதான் தக்க தருணம் என்று அனுமன்,

பரிவிலன் சீறப் போந்து
  பருவரற்(கு) ஒருவ னாகி
அருவியங் குன்றின் என்னோ(டு)
  இருந்தனன்; அவன்பால்
                செல்வம்
வருவதோர் அமைவின் வந்தீர்,
  வரையினும் வளர்ந்த தோளீர்!

[இரவி — சூரியன். இரவிதன் புதல்வன் — சுக்கிரீவன். இந்திரன் புதல்வன் — வாயு. பரிவு — இரக்கம். பருவால் — துன்பம். வரை — மலை.]

என்று எவ்வளவு சாதுரியமாகத் தன் தலைவனது பரிதாப நிலையைத் தெரிவிக்கிறான் பாருங்கள்.

தமையனுக்கிய வாலியை 'இந்திரன் புதல்வன்' என்று அன்னியனைக் கூறுவதுபோலக் கூறுவது, அவர்களுக்கு இடையே உள்ள இதய வேற்றுமையைக் காட்டுகிறது. துன்பத்திற்கு ஒருவன் என்று சுக்கிரீவனைக் குறிப்பது, நண்பர்களாகப் போகும் ராமலட்சுமணர்கள் அவனுடைய துன்பத்தைப் பங்கிட்டுக்கொள்ளப் போகிறார்கள் என்பதை உய்த்துணர வைக்கலாம். 'அருவியங் குன்றின்' என்பதில் அருவியையுடைய அந்தக் குன்று போலச் சுக்கிரீவன் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருக்கிறான் என்பதற்கும் ஒரு நினைவுக்குறியாகலாம்.

'அவனிடம் செல்வம் வருவது போல் நீங்கள் வந்திருக்கிறீர்கள்' என்பது, இவர்களால் அவன் அடையப் போகும் பாக்கியத்திற்கும் ஒரு முற்குறிபோலக் காண்கிறது. அனுமனைச் 'சொல்லின் செல்வன்' என்று குறிப்பிட்டது சரிதானே?



பணிவின் செல்வன்

பிறகு அனுமன், ராமலட்சுமணரை இன்னாரென்று தெரிந்துகொள்ள வேண்டுமேயென்று, 'எங்கள் தலைவனுக்கு உங்களை யாரென்று தெரிவிப்பேன்' என்று உசிதமாய், வினயமாய்க் கேட்கிறான்:

'யாரென விளம்புகேன் நான்?
எங்குலத் தலைவற்(கு) உம்மை?
வீரநீர் பணித்திர்' என்றான்,
மெய்ம்மையின் வேலி போல்வான்.

[விளம்புகேன் – சொல்வேன்.]

லட்சுமணன் பதில் சொல்லுகிறான். இன்னார் பிள்ளையென்று சொல்ல விரும்பித் தசரத சக்ரவர்த்தியின் அருமை பெருமைகளை முதன் முதல் கட்டியங் கூறி அறிவிப்பது போல் பேசத் தொடங்குகிறான்:

சூரியன் மரபில் தோன்றிச்
 சுடர்நெடு நேமி ஆண்ட
ஆரியன், அமரர்க் காகி
 அசுரரை ஆவி உண்ட
வீரியன், வேள்வி செய்து
 விண்ணுல கோடும் ஆண்ட
காரியன், கருணை அன்ன
 கண்ணன்அக் கவிகை மன்னன்.

[சுடர் நெடு நேமி — ஒளி வீசும் ஆக்ஞா சக்ரம். ஆரியன் — மேலோன். அமரர் — தேவர். காரியன் — காரியக் காரன். கருணை அன்ன கண்ணன் — இரண்டு கருணை ஊற்றுக்கள் போன்ற கண்களையுடையவன். அக் கவிகை மன்னன் — ஒரு குடைக்கீழ் மண் விண் என்ற இரண்டு உலகங்களையும் ஆண்டவன்.]

வீரகண்டாமணி முழக்கி வெற்றிச் செய்தி சொல்வதுபோல் 'ஆரியன்' 'வீரியன்' 'காரியன்' என்றெல்லாம் தசரத மாட்சி சொல்கிறான். ஒரு குடைக் கீழ் ஒரு உலகமல்ல, ஈருலகம் ஆண்ட பேராற்றல் பேசுகிறான். ஆற்றல்போல் கருணையும் நிறைந்தவன் என்கிறான். மேலும் பேசுகிறான் கேளுங்கள்:

மயல்தரும் அவுணர் யாரும்
 மடிதர வரிவிற் கொண்ட,
இயல்தரும் புலமைச் செங்கோல்
 மனுமுதல் யாரும் ஒவ்வாத்
தயரதன், கனக மாடத்
 தடமதில் அயோத்தி வேந்தன்.

[மயல்—மயக்கம். அவுணர்—அசுரர். மடிதர — மடிந்து போக. வரிவிற் கொண்ட — கட்டமைத்த வில்லைக் கொண்ட. கனகம்—பொன். தடமதில்— விசாலமான மதில்.]

இப்படிச் சக்ரவர்த்தியின் மாட்சிமை பேசி 'அந்தச் சக்ரவர்த்தி திருமகன், தசரத ராஜகுமாரன்தான் இவன்' என்று ராமனை அறிமுகப்படுத்துகிறான் லட்சுமணன்:

அன்னவன் சிறுவ னும்இவ்
 ஆண்தகை அன்னை ஏவத்
தன்னுடை உரிமைச் செல்வம்
 தம்பிக்குத் தகவில் நல்கி,
நன்னெடுங் கானம் சேர்ந்தான்
 நாமமும் ராமன் என்பான்;
இந்நெடுஞ் சிலைவ லானுக்(கு)
 ஏவல்செய் அடியன் யானே!

[இவ் ஆண்தகை — ஆண்மைக் குண முள்ள இவன். தகவில் — தக்க அன்பினால். சிலை — வில்.]

என்று விடை கூறுகிறான்.

ராமனையே சக்ரவர்த்தியின் அருமை மகன் என்றும், அவன் சிறிய தாயின் கட்டளையைத் தலைமேற் கொண்டு தனக்கு உரிமையாகவுள்ள அரசாட்சிச் செல்வத்தைத் தம்பிக்குக் கொடுத்துத்

தியாகமூர்த்தியாகக் காட்டிற்கு வந்திருக்கிறன் என்று பேசும் லட்சுமணன், தன்னை அவன் தம்பி என்று சொல்லிக் கொள்ளாமல் வேலைக்காரன் என்று தெரிவித்துக் கொள்வது, இத்தம்பியின் மனநிலையை எவ்வளவு பொருத்தமாக வெளியிடுகிறது பாருங்கள் ?

லட்சுமணன் தாயின் அனுமதி பெற்றுக் குதூகலத்துடனும் பெருமிதத்துடனும் அண்ணனுடன் காட்டுக்குப் புறப்பட்டானே, அந்தக் காலத்திலே அம்மா சுமித்திரை 'மகனே' என்று வாய்குளிர அழைத்துச் சொன்ன அந்த வார்த்தையைத் தான் லட்சுமணனால் எப்படி மறக்க முடியும் ?

பின்னும் பகர்வாள் மகனே!
இவன்
பின்செல், தம்பி
என்னும் படிஅன்று, அடியாரினில்
ஏவல் செய்தி!
மன்னும் நகர்க்கே இவன்
வந்திடின்
வா,அ தன்றேல்,
முன்னம் முடிஎன்றனள், பால்முலை
சோர நின்றாள்,

[செய்தி—செய்வாய். முடி—உயிரை முடித்துக்கொள்.]

லட்சுமணன் ராமனுடன் சென்றால், சரி சமானமாகச் சென்றால், தானும் தசரத ராஜகுமாரன், ராமன் தம்பி என்ற நினைவு வருமாம். இத்தகைய நினைப்பினால் காட்டிலே ராமனுக்குக் குற்றேவல்கள் செய்வதில் குறைகள் ஏற்படக் கூடுமாம்.

லட்சுமணனைப் பார்ப்பவர்களும் 'இவன் ராமன் தம்பி' என்று தெரிந்து கொள்ளாமல் 'அவன் ஏவும் தொழில் செய்யும் அடிமை!' என்றே நினைக்கும் படி நடந்துகொள்ள வேண்டுமாம். இவ்விதமாகப் பணி செய்து, 'நகரத்துக்கு ராமன் மீண்டு வந்தால் நீயும் வா' என்று தாய் சொன்னாள். ஆனால் 'அவனுக்கு ஏதேனும் ஆபத்து நேருமாயின்' என்பதைச் சொல்லவும் கூசி, 'அன்றேல் முன்னம் முடி!'—அப்படியல்லாமற் போனால், நீ அவனுக்கு முன்னமே உயிரை முடித்துக்கொள்ள வேண்டும்!'—என்று ஆசிர்வதித்தாள்!

தாயின் அந்தக் கட்டளையைத் தான் இவ்வளவு தூரம்—கிஷ்கிந்தையில் அன்னியனான அனுமனிடம் பேசும்போது கூட—இப்படிப் பிள்ளை நிறைவேற்றி வைப்பானென்று அந்த வீரத்தாய் கூட எதிர்பார்த்திருக்க முடியாது.

அஞ்சனை பிள்ளையான அனுமான் தன்னைச் சுக்கிரீவனின் ஏவலாளாக அறிவித்துக் கொண்டதுபோல், இந்தச் சுமித்திரை பிள்ளையும் ராமனின் ஏவல் செய்யும் அடியான் என்று தன்னை அறிவித்துக்கொள்கிறான்.

அனுமன் சொல்லின் செல்வன். ராமன் வில்லின் செல்வன். லட்சுமணனோ பணிவின் செல்வனாகவும் துணிவின் செல்வனாகவும் ஒருங்கே காட்சியளிக்கிறான் இந்தக் கட்டத்திலே.



தென்னாட்டுச்

தெற்கு வாசல் அருகே காணப்படுகிறது.

மன்மதச் சிற்பங்கள் கிளிவாகனத்தில் ஆரோகணித்திருப்பது போல் சாதாரணமாய் அமைக்கப் பெறுவதில்லை. இங்கே கிளி வாயில் கடிவாளம் மாட்டிச் சேணம் அமைத்து அதில் அமர்ந்து கால்களையும் குதிரை மேல் இருப்பது போல் அங்கபடியில் மாட்டிக் கொண்டிருக்கிறான் மன்மதன்.

இச் சிலையில் வேலைப்பாடுகள் அதிகம் இல்லை. எனினும் 'கிளிக் குதிரை'யும் 'கிளிவாலும்' தத்ரூபம், ரொம்ப இயற்கை.

81

கல்லில் வடித்த அழகும் அறிவும்

அழகுக் கடவுள்

மன்மதன் மலரம்பு (புஷ்ப பாணம்) தாவிக் காதல் விளைக்கிறான் என்பதை அறியாதார் இல்லை. இந்த அழகுமூர்த்தி கிளிமேல் அமர்ந்து மலரம்பு வீசும் பாவனையில் ஒரு சிற்பம், தாரமங்கலம் கோயில் கர்ப்பக்கிரகத்தின் வெளிப்பிராகாரத்தில்

அறிவுக் கடவுள்

மன்மத ரூபம்போல் தட்சிணாமூர்த்தியின் ஞானசௌந்தரியமும் கல்லில் அவதரித்திருக்கும் காட்சியை இவ்வூர் ஏழும்பேச்வரர் கோவிலில் காணலாம். ஜடை அலங்காரமும் பிரபையலங்காரமுமாய் வீற்றிருக்தம் இந்த ஞானமூர்த்தி தான் இக்கோயிலில் அழகின் எல்லை. இந்த ஞான எல்லையில் பரம சாந்தத்தின் எல்லையைச் சிற்பி பிரதிபலிக்கச் செய்திருக்கும் அழகே ஒரு அலாதி யழகு — ஓர் அதிசயக் கலை வளம். ரிஷபம் இம் மூர்த்தியின் காலை நக்குவதுபோல் அமைந்திருப்பது தட்சிணாமூர்த்தியை அருளின் எல்லையாகவும் சுட்டிக் காட்டுகிறது. இச்சிலை இருக்கும் கோவிலோ பாழின் எல்லையை அடைந்திருக்கிறது. கவனிக்காமல் விட்டு விட்டால் சிற்பச்செல்வம் உருத் தெரியாமல் ஒழிந்து போகக்கூடும்.

கோவிலின் தோற்றம்

கோபுர வாசலைத் தாண்டியதும் பார்க்கிறோமே இக்கோவிலின்

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

317. அனுமனின் ஆனந்தக் கூத்து

அண்ணன் வனவாசம் செய்ய நேர்ந்ததில் தம்பி லட்சுமணனுக்குத் தந்தை மீதும் கடுங்கோபம் வந்துவிட்டது. தங்களைக் கங்கை யாற்றின் வடகரையைச் சார்ந்த ஒரு மூங்கில் - காட்டுப் புறமாக விட்டுச் சுமந்திரன் அயோத்திக்குத் திரும்பும்போது அவனை நோக்கி லட்சுமணன் என்ன சொன்னான், ஞாபகம் வருகிறதா?

'காட்டிலே ஸத்புத்திரன் கடும் பசியுடன் காய்களைச் சாப்பிட, மகாராஜா அரண்மனையில் அதிரஸ வர்க்கங்களுடன் போஜனம் செய்துகொண்டே சத்திய பரிபாலனம் செய்கிறாரே!......' என்றெல்லாம் பேச (ஏச)த் தொடங்கி விட்டான். 'மைந்தன் கானகம் செல்ல மன்னன் வானகம் செல்லாது ராஜ போகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறாரே!' என்று கொதித்தது லட்சுமண ஹிருதயம்.

மனமாற்றம்

சக்ரவர்த்தி வானகம் புகுந்த செய்தியைக் கானகத்திலே கேள்விப்பட்ட பின்புதான் லட்சுமணன் தந்தையின் மாட்சிமை உள்ளபடி அறிந்து உருகிப் போயிருக்க வேண்டும். அதற்குச் சற்று முன்புதானே பரதனையும் தம்பியென்று உள்ளபடி உணரலானான்? 'பரதவேந்தனுக்கு நான் தம்பியில்லை' என்று அந்த உறவை அறுத்துக் கொண்டவன் தானே அன்று சுமந்திரன் முன்பு, சக்ரவர்த்தியை வயிற்றெரிச்சலுடன் குறிப்பிட்ட அதே சந்தர்ப்பத்தில்? அப்பேர்ப்பட்ட கோபாவேசத் தம்பி கைகேயி அம்மாளை 'ஒரு அம்மாள், ஒரு பெண்' என்றுதான் கருதியிருக்க முடியுமா?

அதே லட்சுமணன் இப்போது எப்படி மாறிப்போயிருக்கிறான்! அனுமனிடம் ராமனைச் சக்ரவர்த்தியின் அருமைத் திருமகன் என்று எவ்வளவு அருமை பெருமையாக அறிவிக்கிறான்! நல்லது; மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியைத்தான் எவ்வளவு கம்பீரமாய்க் கட்டியங் கூறுவதுபோல், கண்டா மணி அடித்து 'இதோ வெற்றி வீரனைப் பார் பார்' என்று முழக்குவதுபோல் அறிவிக்கிறான். ஏன், பரதனையும் தம்பி என்கிறான் வாய் குளிர, மனங் குளிர, — 'அவன்தான் ராமனுக்கு ஒரு தம்பி!' என்று கூடச் சொல்வதுபோல!

ஐயையோ, கைகேயியைக் கூட 'அன்னை' யென்கிறானே! லட்சுமணன் தானா இப்படிப் பேசுகிறான்? காட்டுக்குப் பரதனுடனும் மற்ற அன்னையருடனும் வந்திருந்தாளே, அப்போது அவளுடைய பச்சாத்தாபம் கண்டு, மனமாற்றம் கண்டு, லட்சுமணனும் மனமாற்றம் அடைந்து விட்டானா?

காரணம்?

இன்னும் ஆலோசித்துப் பார்ப்போம். பரதன் கைகேயி முதலானவர்களெல்லாம் நீங்கிய பின், 'சூர்ப்பணகைப் பிராட்டி' தோன்றி, விதவை — மறு

மணமும் காதல் - திருமணமும் ராட்சஸ மனுஷ்யக் கலப்புப் பெருமணமும் ஒருங்கே புரிந்துகொண்டு, ராட்சஸ கோபத்திற்கும் அச் ,சம்பந்தத்தால் சாந்தியுண்டாக்கி, மனித குலத்தைக் காப்பாற்றுவதற்கும் அத் திருமண வைபவத்தையே ஒரு சாதனமாக்கிக் கொள்ள முயன்றாளல்லவா? எனினும், ராமன் அந்த உறவைத் தூவென்று தள்ளித் தன் குலப்பெருமை தோன்றத் தானும் தம்பியும் தசரத சக்ரவர்த்தியின் புதல்வர் என்பதைக் கம்பீரமாய் எடுத்துரைத்தான் அல்லவா?

அந்த வாக்குவன்மையை இப்போது கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பார்க்கலாம்:

'தரைஅளித்த தனிநேமித்
  தயரதன்தன் புதல்வர்யாம்;
  தாய்சொல் தாங்கி
விரைஅளிந்த கான்புகுந்தேம்,
  வேதியரும் மாதவரும்
  வேண்ட, நீண்டு
கரைஅளித்தற்(கு) அரியபடைக்
  கடலரக்கர் குலம்தொலைத்துக்
  கண்டாய்; பண்டை
வரைஅளித்த குலமாட
  நகர்புகுவேம்; இவைதெரிய
  மனக்கொள்' என்றான்.

இந்தப் பாட்டிலே முழங்கும் வீரகண்டாமணி கிஷ்கிந்தா காண்டத்தில் லட்சுமணன் வாக்கிலும் இதே தோரணையில்



முழங்குகிறது. ‘தனி நேமித் தயரதன்’ இப்போது லட்சுமணன் வாயிலாகச் ‘சுடர் நெடு நேமி ஆண்ட ஆரிய’னாகிறான். தசரதன் ஆளும் தலைநகரம் அங்கே ராமன் வாக்கில் ‘வரை அளித்த குலமாட நகர்’; இங்கே லட்சுமணன் வாக்கில் ‘கனக மாடத் தடமதில் அயோத்தி.’ அங்கே ‘தாய் சொல் தாங்கி’ என்று ராமன் எப்படி அருமையும் பெருமையுமாய்க் கைகேயியைக் குறிப்பிடுகிறானோ, அப்படியே லட்சுமணனும் ‘அன்னை எவ’ என்று குறிப்பிடுகிறான், பாருங்கள்!



ஆனால் அங்கே ராமன் ‘தயரதன் தன் புதல்வர் யாம்’ என்று தன்னோடு லட்சுமணனையும் சேர்த்துப் பெருமை பேசினான். இங்கேயோ லட்சுமணன் தன்னை விலக்கி ராமனையே தசரத புத்திரனாக்குகிறான். பிறகு, மறந்தவன் ஞாபகப்படுத்திக் கொள்வது போல் தம்பியாகப் பரதனைக் குறிப்பிட்டு இருவரையும் தசரத புத்திரராக்குகிறான். தன்னையோ வேலைக்காரனாகத் தாழ்த்திக் கொள்கிறான். ஆனால் அனுமனா ஏமாறப் போகிறவன்?

அரக்கியான சூர்ப்பணகை முன்பு ராமன் சக்ரவர்த்தியையும் கைகேயியையும் ஒருங்கே பெருமைப்படுத்திப் பேசியது லட்சுமணனுள்ளத்தில் ஆழ்ந்து ஊறிக் கொண்டிருந்ததென்று கருதலாம். அந்த ஊற்றுக்கண் திறந்து உணர்ச்சி பொங்குவதுபோல் பொங்கி வருகின்றன இரண்டு பாடல்கள் லட்சுமணன் வாக்காக.

குதூகலம் குதிபோடுகிறது

அப்பால் லட்சுமணன் அனுமனிடம் ராமனுடைய வரலாற்றின் முக்கிய அம்சங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் தெரிவிக்கிறான். அனுமன் சுக்கிரீவனை அழைத்து வருவதாகப் போகிறான். அனுமன் எவ்வளவு உத்ஸாகமாய் உள்ளம் குதிகொள்ளப் போகிறான்!

விசையுறு பந்தினைப்
போல்—உள்ளம்
வேண்டிய படிசெலும்
உடல் கேட்டேன்

என்று பாரதியார் பராசக்தியைப் பிரார்த்தித்துக் கேட்கிறாரே, இந்தப் பிரார்த்தனை அனுமனுக்குப் பரிபூர்ண வரமளித்திருக்கிறது. உள்ளம் குதி போடுவதற்கு இசைந்தபடி உடம்பும் குதி போட்டுப் போகிறது:

போனமந் தரமணிப்
புயநெடும் புகழினான்,
ஆனதன் பொருசினத்(து)
அரசன்மா டணுகினான்,
‘யானும்உன் குலமும்இவ்
உலகும்உய்ந் தனம்’என,
மானவன் குணமெலாம்
நினையுமா மதியினான்.

[மந்தர மணிப்புயம் — மந்தர மலை போன்ற அழகிய புஜங்கள். பொருசினத்து அரசன்—(வாலியுடன்) போர் செய்தற்கு உரிய (செல்லாக்) கோபத்துடன் கூடிய சுக்கிரீவ மகாராஜா. அரசன் மாடு—அரசனிடம். அணுகினான்—சமீபித்தான். என—என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டு.

மானவன்—மனுச் சக்ரவர்த்தியின் வம்சத்தில் தோன்றிய ராமன். மாமதி—பேரறிவு.]

குதித்தோடி வந்த அனுமன் சுக்கிரீவனை அடைந்ததும் குதூகலமாய்க் குதித்துக் கூத்தாடிய வண்ணமே பேசுகிறான்:

'வாலிஎன் றளவிலா
வலியினுன் உயிர்தெறக்
காலன்வந் தனன், இடர்க்
கடல்கடந் தனம்'என
ஆலம்உண் டவனினின்(று)
அருநடம் புரிகுவான்.

[உயிர் தெற—உயிரை அழிக்க. இடர்க் கடல் கடந்தனம்—துக்க சமுத்திரத்தைக் கடந்து கரையேறினேம். என—என்று. ஆலம் உண்டவனின்—விஷம் உண்ட சிவபெருமான் போல.]

லட்சுமணன் தன்னைச் சக்ரவர்த்தி புத்திரன் என்று சொல்லிக் கொள்ளாமல் வேலைக்காரன் என்று தெரிவித்துக் கொண்ட போதிலும், அந்தப் பெரும் பணிவும் பேரறிவும்தான் இந்த அனுமனுடைய பெரும் பெரும் பணிவையும் பெரும் பேரறிவையும் மயக்கிவிட முடியுமா? இருவரும் 'ஆழியான் மைந்தர்' என்பதை அப்போதே கண்டு கொண்டவன்தானே:

ஆழியான் மைந்தர்பே—
ரறிவினர் அழகினர்
ஊழியால் எளிநிஸ்நிற்(கு)
அரசுதந்(து) உதவுவார்.

[ஆழியான் மைந்தர் - (தசரத) சக்ரவர்த்தியின் மைந்தர்கள். ஊழியால் - நெடுங்காலமாக. நிற்கு - உனக்கு.]

இனி, ராமனுடைய துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனத் திறமையை வெளியிட்டுச் சுக்கிரீவனுக்கு நம்பிக்கை ஊட்டுகிறான்:

வேலிகல் சினவுதா—
டகைவிளிந் துருளவிற்
கோலி,அக் கொடுமையாள்
புதல்வனைக் கொன்று,தன்
காலியற் பொடியினுல்
நெடியகற் படிவமாம்
ஆலிகைக் கரியபே—
ருருஅளித் தருளினுன்.

[வேல் இகல் சினவு தாடகை-வேலாயுதம் கையிலேந்திப் பகைமையுடன் கோபித்து வருகின்ற தாடகை. விளிந்து உருள - செத்து விழுந்து உருளும் படி. வில் கோலி — வில்லை வளைத்து. கொடுமையாள் புதல்வன் — தாடகை புத்திரனை சுபாகு. கால் இயல் பொடியினுல் — காலில் பொருந்திய தூளியால். கல் படிவமாம் — கல்லின் வடிவமாயிருந்த. ஆலிகை — அகலிகை. பேர் உரு — சிறந்த நிஜரூபம்.]

தாடகை வதம் முற்றுப்பெற்று அகலிகையின் சாப விமோசனமும் இனிது நிறைவேறியது கண்ட விசுவாமித்திரர்,

கைவண்ணம் அங்கு கண்டேன்,
கால்வண்ணம் இங்கு கண்டேன்

என்று கூறி 'இனி இந்த உலகுக்கெல்லாம் துயரம் தீர்ந்தது!' என்று குதூகலித்தாரல்லவா? அதே கைவண்ணமும் கால்வண்ணமும்தான் இங்கும் அனுமன் கண்டு காட்டுகிறான் சுக்கிரீவனுக்கு, 'இனி உன் துயரமெல்லாம் தீர்ந்தது' என்ற எக்களிப்புடன்.

பரசுராம கர்வபங்கத்தையும் விராத வதத்தையும் சொல்லி ராமனுடைய துஷ்டநிக்கிரக சாமர்த்தியங்களை மேலும் வற்புறுத்துகிறான்:

'தெவ்இரா வகைநெடுஞ்
சிகைவிரா மழுவினுன்
அவ்இரா மனையும்மா
வலிதொலைத் தருளினுன்
இவ்இரா கவன்; வெகுண்(டு)
எழும்இரா அனையனும்
வெவ்விரா தனைஇரா
வகைதுடைத் தருளினுன்!

[தெவ் இராவகை — பகைவர்கள் இல்லாமல் போகும்படி. நெடுஞ்சிகை விரா மழுவினுன் —நீண்ட ஜ்வாலை விரவிய மழுப்படையை உடையவன். அவ் இராமன் — அந்தப் பரசுராமன். மாவலி — மிக்க வலிமை. வெகுண்டு — கோபித்து. இரா அனையன் — இருட்டைப் போன்றவன். வெவ்விராதன் — கொடிய விராதன்.]

சித்திர ராமாயணம்

318. மலையிலே மகிழ்ச்சிப் பொங்கல்

ராம லட்சுமணரது சக்தியையும் மகிமையையும் கூத்தாடிக் கொண்டாடிய அனுமன், 'அவர்கள் உன்னோடு சிநேகம் செய்துகொள்ள விரும்புகிறார்கள்' என்று சொல்லிச் சுக்கிரீவனை அழைக்கிறான். சீதையைத் தேடிப் போய்க் கொண்டிருப்பவர்கள் வழியிலே சுக்கிரீவனோடு நட்புக் கொள்ள விரும்புவதற்குக் காரணம் என்ன? சுக்கிரீவனுடைய அகத் தூய்மையும் தவமும் ஆகத்தான் இருக்கவேண்டும் என்கிறான் அனுமன்.

ராம பக்தியும் ராஜ பக்தியும்

இப்படிச் சொல்லும் போதே, ராவணன் மதியில்லாமல் மாயை செய்து ராம பத்தினியைக் கவர்ந்து கொடிய காட்டு வழியில் கொண்டு போனானே அந்தக் கொடுஞ் செயலையும் பிரஸ்தாபிக்கிறான்:

மாயையால் மதியிலா
நிருதர்கோன்,
மனைவியைத்
தீயகான் நெறியின்உய்த்-
தனன்; அவள்
–தேடுவார்,
நீ ஐயா! தவம்இழைத்-
துடைமையால்,
நெடுமனம்
தூயையாஉடைமையால்,
உறவினைத் துணிகுவார்.



[நிருதர்கோன் - அரக்கர் அரசனாகிய ராவணன். மனைவி – ராமன் மனைவி. கான் நெறி – காட்டு வழி. உய்த்தனன்- கொண்டு போனான். இழைத்துடைமையால் - இழைத்திருப்பதால்; செய்திருப்பதால். தூயையா - தூய்மை உள்ளவனாக. உறவு - (இங்கே) சிநேக உறவு.]

நன்றியும் விநயமும்

'ராவணன் சீதையைத் திருடிச் சென்றது கூடச் சுக்கிரீவன் செய்த தவம் தானோ? அதனால் தானே சீதையைத் தேடி வந்து சுக்கிரீவனுறவையும் நாடி வந்திருக்கிறார்கள்?' என்று கூடத் தொனிக்கப் பேசும் அனுமனுடைய உள்ளத்திலே இப்போது ராஜ பக்தியும் ராம பக்தியும் போட்டி போடக் காண்கிறோம்.

அனுமன் பேசி முடித்ததும் சுக்கிரீவன், ராமனை நோக்கிச் செல்ல வேண்டிய அவசரத்திலும் மறந்து விடாமல் அனுமனுக்கு நன்றி தெரிவிக்கும் அருமையையும் அழகையும்தான் பாருங்கள்:

'உன்னையே
உடையஎற்(கு)
அரியதெப்
பொருளரோ?

பொன்னேயே, பொருவுவாய் !
'போதே'எனப் போதுவான்,
தன்னேயே அனேயவன்
சரணம்வந் தணுகினுன்.

[எற்கு — எனக்கு. பொன்னேயே பொருவுவாய் — பொன் போன்றவனே. போது என — வருவாய் என்று சொல்லி. தன்னேயே அனேயவன் — தனக்குத் தானே ஒப்பான ராமன். சரணம் — திருவடி. வந்து அணுகினுன் — அருகே வந்தான்.]

தேவராஜாவுக்குப் பிரகஸ்பதி போல் தனக்கு வாய்த்திருக்கிறுன் அனுமன்; ஆகவே தனக்கு அரிய தொன்றும் இல்லே; ராமனுடைய சிநேகமும் எளிதாகி விட்டதே! — என்ற குதூகலத்துடன் சுக்கிரீவன் உடனே ராமனிருக்கும் இடத்திற்கு வந்து சேர்கிறுன். ராமனுக்கு அருகே பக்தியுடன் விநயமாக வந்து சேர்வதைத் தான் இங்கே 'சரணம் வந்தணுகினுன்' என்கிறுன் கவிஞன்.

பக்தியும் காதலும் பரவசமும்

சுக்கிரீவன் ராமனேப் பார்த்ததும் அப்படியே வசீகரிக்கப் பெறுகின்றுன். ராம சுக்கிரீவர் நட்பு 'கண்டதும் காதல்' என்ற இனத்தைச் சேர்ந்ததாகவே தோன்றுகிறது. ராமசௌந்தரியம் — ரூபசௌந்தரியம் மட்டுமல்ல, வீரசௌந்தரியமும் தியாக சௌந்தரியமும் சேர்ந்ததுதான் — சுக்கிரீவனே வசீகரித்து, 'இவனே உலகத்திற்கு லட்சிய புருஷன், புருஷோத்தமனுன பகவான்' என்றெல்லாம் எண்ணச் செய்து விடுகிறது.

சுக்கிரீவனுடைய நட்புக்காதல் மேலும் மேலும் கடல் பொங்குவது போலப் பொங்குகிறது. அவன் அந்தக் கடலிலிருந்து கரையேற இஷ்டப்படாமலே இருக்கிறுன். அவனே நோக்கிய ராமனுக்கும் அன்பு பெருகிய வண்ணமாயிருக்கிறது.

கடைசியாக அந்தக் காதற் கடலின் அலைகளில் மொத்துண்டு மிதந்துகொண்டே ராமனே நெருங்குகிறுன். சுக்கிரீவன், தன்னே அறியாமலே. ராமன் தன் அழகிய மலர்க்காம் நீட்டி வரவேற்று 'இங்கே வந்து இனிமையாக வீற்றிருப்பாய்' என்று உபசரிக்கிறுன், கடலில் கிடப்பவனேக் கப்பலில் தூக்கி வைத்துக் கொள்வது போலே:

என நினேந்(து) இனேய எண்ணி
இவர்கின்ற காதல் ஓதக்
கனேகடற் கரைநின் றேருக்,
கண்ணிணே களிப்ப நோக்கி,
அனகனேக் குறுகி ஞன்; அவ்
அண்ணலும் அருத்தி கூரப்
புனேமலர்த் தடக்கை நீட்டிப்
'போந்(து) இனி(து)
இருத்தி' என்றுன்.

[இனேய எண்ணி—இப்படியெல்லாம் ஆலோசித்து. இவர்கின்ற—மேன்மேல் பெருகுகின்ற. ஓதக் கனே கடல்—வெள்ளத்தோடு கோஷிக்கும் கடல். ஏரு — ஏருமல். கண்இணே — இரண்டு கண்களும். அனகன் — குற்றமற்ற ராமன். குறுகினுன் — நெருங்கினுன். அவ் அண்ணலும் — அந்தப் பெரியோனும். அருத்தி — ஆசை. கூர — மிகுதியாக. புனேமலர்த் தடக்கை — அழகிய செந்தாமரை மலர் போன்ற பெரிய கை. போந்து — வந்து. இருத்தி—இருப்பாய்.]

அன்பு செய்த அற்புதம்

நோபெல் பரிசு பெற்றதும் ரவீந்திரநாதர், 'தூரத்தைச் சமீபமாக்கி அன்னியனேச் சகோதரனுக்கிய அன்பின் பெயரால்' வந்தனம் செலுத்தினர். அத்தகைய அன்புதான் சுக்கிரீவனேயும் ராமனே நெருங்கச் செய்தது; ராமனேயும் கைநீட்டி வரவேற்கச் செய்தது.

இந்த நண்பர் இருவரும் முன்னுள் செய்த நல்வினேயாகிய தவமும் முயற்சியும், கல்வியும் ஞானமும், இசைந்தது போல் இசைந்திருக்கிறுர்களாம். எவ்வளவு அவசியமான சேர்த்தி, இனி விளேயப் போவதை நோக்கும்போது! அன்பு சேர்த்து வைத்த சேர்த்தி.

பிறகு ராமன் தானும் தம்பியும் அங்கு வந்த வரலாற்றைச் சொல்லி,

'கையறு துயரம் நின்னல்
கடப்பது கருதி வந்தேம்,
ஐயநிற் றீரும்' என்ன,
அரிக்குலத்(து) அரசன்
சொல்வான்.

[கையறு துயரம் - மிகப்பெரிய துயரம்; துணையில்லாமல், செயல் தெரியாமல், நாங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பம். வந்தேம் - வந்தோம். நின் தீரும் - உன்னல் தீரும். அரிகுலம் - குரங்குக் கூட்டம்.]

'சீதையைப் பிரிந்து தேடத் துணையின்றித் தவித்துச் செயல் அறியாது தத்தளித்துக் கொண்டிருக்கிறேம். உன் துணைகொண்டுதான் காரியசித்தி ஏற்படும், எங்கள் துயரம் உன்னல் தீர்ந்து போகும்' என்று ராமன் சொல்லித் தங்கள் துன்பத்தைக் 'கையறு துயரம்' என்றும் குறிப்பிடுகிருனல்லவா? 'இதனல் ராமன் சுக்கிரீவனைச் சரணம் அடைவதாகாதா?' என்று விவாதித்தார் ஒரு நண்பர்.

'இந்தக் கட்டத்தைச் சுக்கிரீவ சரணுகதி என்று சொல்வதைக் காட்டிலும் ராம சரணுகதி என்று சொல்லலாமோ!' என்றும் அந்த நண்பர் விவகரித்தார். ஆனல் அடுத்த பாட்டே சுக்கிரீவ சரணுகதியைத் தெளிவாக வற்புறுத்துகிறது:

'சரண்உனைப் புகுந்தேன்,
என்னைத்
தாங்குதல் தருமம்' என்ருன்.



இப்போது தனக்கு அண்ணன் ஒருவன் இருப்பதாகத் தெரிவிக்கிறான் சுக்கிரீவன். அவன் தன் முரட்டுக் கையை அடிக்க உயர்த்திக்கொண்டே இந்தத் தம்பியைத் துரத்தினானாம்; உலகமெங்கும் துரத்தினானாம். அப்படி எங்கெல்லாமோ ஓடித் தவித்த சுக்கிரீவன் இந்தக் குன்றையே அரணாகக்கொண்டு இது வரையில் பிழைத்திருக்கிறானாம். அந்தத் தமையன் இந்தக் குன்றுக்கு வந்தால் தலைவெடித்து இறந்துபோவான் என்று ரிஷி சாபம். அதனால்தான் இக்குன்றை அரணாகக்கொண்டு இவன் பிழைத்திருக்க முடிந்தது.

எனினும் 'இப்படிப் பதுங்கிக் கிடப்பதும் ஒரு பிழைப்பா?' என்ற எண்ணத்துடன் சுக்கிரீவன் உயிர் துறக்க எண்ணியதுண்டு. 'ஆனால் ஆருயிரை விடமாட்டாமல் வைத்துக் கொண்டே தவித்துக் கொண்டிருக்கிறேன். இந்த நிலையில் உள்ள நான் உன்னைச் சரணம் அடைகிறேன்' என்கிறான்.

அடுத்த பாட்டில் ராமன் சுக்கிரீவனுக்கு அபயம் அளிக்கிறான். 'இராமனும் இரங்கி நோக்கி' அபயம் அளிப்பதாய்க் கவிஞன் கூறுகின்றான். 'உனக்கு வரும் இன்ப துன்பங்களை எனக்கு வந்தன என்றே எண்ணி உன்னைக் காப்பாற்றுவேன்' என்று அபயமளிக்கிறான்.

மேலும் சொல்லுகிறான் ராமன்:

'மற்றினி உரைப்ப தென்னே?
வானிடை, மண்ணில், உன்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்:
தீயரே எனினும் உன்னோ(டு)
உற்றவர் எனக்கும் உற்றார்;
உன்கிளை என(து); என்
காதல்—
சுற்றம்உன் சுற்றம்; நீஎன்
இன்னுயிர்த் துணைவன்'
என்றான்.

[செற்றவர் — வருத்தியவர். கிளை — உறவினர். காதல் சுற்றம் — காதலால் எனக்கு நெருங்கிய மனைவி முதலான சுற்றத்தாரும்.]

ராமனுடைய வார்த்தைகளுக்கெல்லாம் சிகரமாக 'நீ என் இன்னுயிர்த் துணைவன்' — அதாவது 'நீ எனக்கு இனிய உயிர்த் தோழனும் சகோதரனும் ஆவாய்!' — என்று ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் சொல்லி விடுகிறான்.

காட்டு மனிதனாகிய குகனை ஐந்தாவது சகோதரனாக அங்கீகரித்த ராமன் இப்போது சுக்கிரீவனை ஆறாவது சகோதரனாக்கிக் கொள்கிறான். இத்தகைய சகோதர தர்மத்திலே ஒருவரை ஒருவர் தாங்குவது தருமம்தான். 'யார் யாரைச் சரண் புகுந்தார்?' என்று வாதிப்பதே வீண்வாதம்.

தோழமை வாழ்க

இப்படி ராம சுக்கிரீவர் கட்புக் கலந்து சகோதரரானதும் வானரரும் வானவரும் ஒருங்கே மகிழ்ந்து போகிறார்களாம்:

ஆர்த்தது குரக்குச் சேனை;
அஞ்சனை சிறுவன் மேனி
போர்த்தன பொடித்த ரோமப்
புளகங்கள்; பூவின் மாரி
தூர்த்தனர் விண்ணோர்; மேகம்
சொரிந்தன, 'அனகன் சொன்ன
வார்த்தைஎக் குலத்து ளோர்க்கும்
மறையினும் மெய்'என்(று)
உன்னு.

[ஆர்த்தது — ஆரவாரம் செய்தது. குரக்குச் சேனை — வானரக் கூட்டம். அஞ்சனை சிறுவன்—அனுமன். போர்த்தன — மறைத்தன. பொடித்த — அரும்பிய. ரோம புளகம் — மயிர்ச் சிலிர்ப்பு. தூர்த்தனர் — நிறைத்தார். அனகன் — குற்றமற்ற ராமன். மறையினும் மெய் — வேதவாக்கைக் காட்டிலும் சத்திய வாக்கு.]

ராமசுக்கிரீவரின் சகோதர தர்மம் வானரரோடு வானவருக்கும் வேற்றுமையின்றி மகிழ்ச்சி பொங்கச் செய்கிறது. இந்த மகிழ்ச்சிப் பொங்கலை முன்னிட்டு அனுமன் வாழ்த்துக் கூறுகிறான். ராமன் அடிகளில் தாழ்ந்து எழுந்து அவனை நோக்கி,

தோழனும் நீயும்
வாழி!

என்கிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

319. நிலவில் தங்கும் நெருப்பு

'வாழி மன்னவ! நீயும் உன் தோழனும் வாழி' என்று அஞ்சலி ஹஸ்தனாய் ஆனந்த பரவசனாய் வாழ்த்திய அனுமன், 'நீங்கள் இருவரும் உங்கள் அரண்மனையில் இனிது வீற்றிருப்பதை நாங்கள் எல்லாரும் கண்டு களிக்கவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்.

புஷ்ப சயனத்திலே தோழர்கள்

புன்னை, நாரத்தை முதலான மரக் கூட்டங்களும் தாமரைத் தடாகங்களும் உள்ள ஒரு பூஞ்சோலையை அடைந்தார்கள்:

போகபூ மியை
 யும் ஏசும்
புதுமலர்ச்
 சோலை புக்கார்

அச்சோலையில் சந்தன மரங்களும் அகில் மரங்களும் நிறைந்திருந்தன. இடையிடையே பளிங்குப் பாறைகள், அப்பாறைகளிலே சிறு வீடுகள். அருகேயுள்ள தடாகக் கரைகளிலே மரங்களில் ஊஞ்சல்கள் ஆடிக்கொண்டிருந்தன. இத்தகைய சோலை நடுவே சுக்கிரீவனின் இருப்பிடம் இருந்தது. இருப்பிடமா, ஒளிப்பிடமா? அனுமன் குறிப்பிட்ட அரண்மனை இதுதான்.



அந்த இருப்பிடத்திலே ராமனும் சுக்கிரீவனும் ஒரு புஷ்ப சயனத்திலே வீற்றிருந்து மனம் கலந்து பேசத் தொடங்கினார்கள். அருகே லட்சுமணனும் உட்கார்ந்திருந்தான்.

ஏய அன்னதாம்
 இனிய சோலைவாய்
மேய மைந்தரும்
 கவியின் வேந்தனும்
தூய பூவணை
 பொலிந்து தோன்றினார்,
ஆய அன்பினோ(டு)
அளவ ளாவுவார்

[ஏய–இசைவாக. அன்னதாம் – அப்படிப்பட்டதாகிய. சோலைவாய் மேய–சோலையை அடைந்த. மைந்தரும்–(இங்கே) ராமலட்சுமணர்களும். கவியின் வேந்தனும் – வானர ராஜாவான சுக்கிரீவனும். பூவணை–புஷ்ப சயனம்.]

விருந்து

நண்பர்கள் சிறிது அளவளாவிய

பின் ராமலட்சுமணருக்கு உணவு தயாராயிற்று. உணவு என்றால்,

சைவசுத்த போஜனமும்
சாதுரியப் பார்வைகளும்...

என்று பாரதியார் பாடியிருக்கிறாரே அத்தகைய 'சைவசுத்தபோஜன'க்காரரான வானரர்கள் கொண்டுவைத்த கனிகளும் கிழங்குகளும் காய்களும் கீரை வகைகளும்தான். இந்தத் தூய உணவை நிர்மலனான ராமன் நீராடி உண்டு பசி தீர்த்துக் கொள்கிறான். என்ன விருந்து, என்ன விருந்தாளி!

கனியும் கந்தமும்
காயும் தூயநன்(கு)
இனிய யாவையும்
கொணர, யாரினும்
புனிதன் மஞ்சனத்
தொழில்புரிந்துபின்,
இனிதிருந்துநல்
விருந்தும் ஆயினன்.

[கந்தம் - கிழங்குகள். தூயநன்கு இனிய யாவையும் - தூய்மையாகவும் மிகவும் இனிமையாகவும் உள்ள மற்றைக் கீரை முதலியவற்றையும். விருந்து - விருந்தாளி.]

ஒரு புதுப் பொருத்தம்

விருந்தாளிகளைச் சுக்கிரீவன் எவ்வளவோ அன்போடுதான் உபசரித்தான். எனினும் சுக்கிரீவன் மனைவி வந்து பரிமாறவில்லையே! 'ஏன் இப்படி?' என்று கருதிய ராமன், 'இந்தத் தோழனும் நம்மைப்போல் மனைவியைப் பிரிந்திருக்கிறானோ?' என்று சந்தேகித்துக் கேட்கிறான்:

விருந்தும் ஆகி,அம்
மெய்ம்மை அன்பினோ(டு)
இருந்து நோக்கிநின்(று)
இறைவன் சிந்தியாப்,
'பொருந்து நன்மனைக்(கு)
உரிய பூவையைப்
பிரிந்துளாய்கொலோ
நீயும் பின்?'என்றான்.

[இறைவன் - (இங்கே) ராமன். சிந்தியா - சிந்தித்து. பொருந்து நன்மனைக்கு - பொருந்திய நல்ல மனை வாழ்க்கைக்கு. பூவை - கிளிபோன்ற மனைவி. பிரிந்துளாய் கொலோ - (என்னைப்போலவே) பிரிந்திருக்கிறாயோ.]

வாலி பராக்கிரமம்

அதுதான் சந்தர்ப்பம் என்று ராமனிடம் அனுமன் வாலியைக் குறித்துப் பிரஸ்தாபிக்கத் தொடங்குகிறான். ராமனுடைய வினாவுக்குச் சுக்கிரீவன் விடையளிப்பது உசிதமில்லை என்று தான், ஒதுங்கி உட்கார்ந்திருந்த அனுமன் பளிச்சென்று எழுந்து நின்று பதில் சொல்லுகிறான்:

என்ற வேலையின்,
எழுந்து மாருதி
குன்று போலநின்(று)
இருகை கூப்பினன்,
'நின்ற நீதியாய்!
நெடிது கேட்டியால்,
ஒன்று யான்உனக்(கு)
உரைப்ப(து) உண்டெ'ன.

[வேலையின் - வேளையில். மாருதி - அனுமன்.]

ராமன் கேட்கத்தானே செய்கிறான்? எனினும்,

நெடிது கேட்டியால்

என்கிறான் அனுமன். 'சாவகாசமாய்க் கேட்க வேணும் அந்த நீண்ட கதையை' என்பது கருத்து. கேட்டுப் பரிகாரம் செய்ய வேணும் என்று வற்புறுத்துவது குறிப்பு.

'நிலைபெற்ற நீதியாய்! உன்னிடம் உரைப்பது ஒன்று உண்டு. உற்றுக் கேட்டருள்வாய்' என்று வாலியின் பராக்கிரமத்தைச் சொல்லப் போகிறான். 'வாலி மகா பலசாலி' என்று சொல்லி 'அவனுக்கு ஸாக்ஷாத் பரமேசுவரனுடைய அருள்-வலிமையும் கிடைத்திருக்கிறது' என்கிறான்:


நாலு வேதமாம்
நவையில் ஆர்கலி
வேலி அன்னதோல்
மலையின் மேலுளான்
சூலி தன்அருள் —
துறையின் முற்றினன்
வாலி என்றுளான்
வரம்பில் ஆற்றலான்,

[நவையில் - குற்றமில்லாத. ஆர்கலி - நிறைந்த ஓசையுடைய கடல். வேலி - (இங்கே) கரை. தொல் மலை - பழைய மலையாகிய கைலையங்கிரி. சூலி - சூலாயுதத்தையுடைய சிவபெருமான். அருள் துறை - அருளின் வழி. முற்றினன் - முதிர்ந்த வரம் பெற்றவனாகிய.]

நாலு வேதங்களும் நாலு ஞானக் கடல்களாய்க் கிடக்க அந்தக் கடல்களுக்குக் கரை கிடப்பது போலப் பாதுகாப்பா யிருக்கிறதாம் புராண மலையாகிய கைலையங்கிரி. மலைமேல் மலை போல் கைலைமீது ஞான மலையாகிய சிவபெருமான் வீற்றிருக்கிறாராம். நல்லார் பொல்லார் என்று பாராது தன்னை நாடியவர்களுக் கெல்லாம் வரப்பிரசாதம் பொழிந்த வண்ணமா யிருக்கிறார் அந்த அருளாளர். வாலி அந்தச் சிவபெருமானை உபாசித்துத் தன் ஆற்றலை வரம்பில்லாத ஆற்றலாகப் பெருக்கிக் கொண்டிருக்கிறான்.

எட்டுத் திக்குக்களின் எல்லையிலும் போய் அஷ்டமூர்த்தியாகிய சிவபெருமானை உபாசிக்கும் வாலிக்கு எவ்வளவு பலமுள்ளவர்கள் போர் செய்ய எதிர்ப்பட்டாலும், அவர்களுடைய தேகபலம் வரபலம் முதலான பலங்களில் எல்லாம் பாதி பாகம் வந்துவிடுமாம்:

கிட்டு வார்பொரக்
  கிடைக்கின் அன்னவர்,
பட்ட நல்வரம்
  பாகம் எய்துவான்,
எட்டு மாதிரத்(து)
  இறுதி நாளும்உற்(று)
அட்ட மூர்த்திதாள்
  பணியும் ஆற்றலான்.



[கிட்டுவார் - நெருங்குகிறவர்களாய். பொர - போர்செய்ய. கிடைக்கின் - எதிரே கிடைத்தால். அன்னவர் பட்ட நல்வரம் - அவர்கள் முன்பு அடைந்திருக்கும் நல்ல வரங்களில். பாகம் - பாதிபாகம். எய்துவான் - அடைபவன். மாதிரத்து இறுதி - திக்குகளின் எல்லையிலும். நாளும் - நாள்தோறும். அட்டமூர்த்தி - அஷ்டமூர்த்தியாகிய சிவபெருமான்.]

மண், கனல், புனல், காற்று, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களும் சூரிய. சந்திரரும் சிவமயமாயிருப்பதோடு சிவபெருமான் எஜமானனாகவும் விளங்குகின்றார். இப்படி அஷ்டமூர்த்திகளாகவும் காட்சிதரும் இஷ்டமூர்த்தியின் வரப்பிரசாதத்தால் வாலி வரம்பில்லாத ஆற்றல் பெற்று வெல்லற்கு அரியவனாய் விளங்குகிறான்.

அனுமன் மேலும் வாலியின் மகா பலத்தை விரிவாய்ப் பேசுகிறான். காற்றினும் கடுவேகம் உடையவன் என்கிறான். வாலி மார்பில் முருகக் கடவுளின் வேலும் செல்லாது என்கிறான். ஆதிசேஷன் கிடந்து தாங்கும் பூமியை வாலி நடந்து தாங்குவான் என்கிறான். பிராணிகளுக்கெல்லாம் அழிவைச் செய்யும் எமனும் வாலியின் ஆணையைக் கடந்து செல்லமுடியாது என்று சொல்லுகிறான்.

அண்ணன்தான்

அந்த வாலி இந்தச் சுக்கிரீவனுக்கு ஒரு தாய் வயிற்றில் அண்ணனாகப் பிறந்தவன் என்பதையும் அறிவிக்கிறான்:

இந்தி ரன்தனிப்
  புதல்வன், இன்னளிச்
சந்தி ரன்தழைத்
  தனைய தன்மையான்,
அந்த கன்தனக்(கு)
  அரிய ஆணையான்,
முந்தி வந்தனன்
  இவனின் மொய்ம்பினோய் !

[தனிப்புதல்வன் - ஒப்பில்லாத புதல்வன். இன்அளி - (இங்கே) இனிமையான குளிர்ச்சி. தழைத்து அனைய - தழைத்தாற் போன்ற; விளங்கினாற் போன்ற. அந்தகன் - எமன். ஆணை - ஆக்ஞை. இவனின் - இந்தச் சுக்கிரீவனைக் காட்டிலும்.]

ஒரே தாயின் வயிற்றில் இந்திரன் அருளால் வாலியும் சூரியன் அருளால் சுக்கிரீவனும் பிறந்தார்களாம். வாலியை இந்திர புத்திரனென்றும், சுக்கிரீவனைச் சூரிய புத்திரனென்றும் கூறுவதுண்டு. இந்த வானரர்களெல்லாம் சுவேத வானரர்கள் என்கிறான் கவிஞன்.

இந்நாளில் சில விநோத விபரீத ஆராய்ச்சிக்காரர்கள் அரக்கர்களைத் திராவிடர்களென்று கூசாது பேசுவதோடு திருப்தி அடையாமல் வானரர்களையும் 'கருநிறமுள்ள திராவிடர்களே' என்பர். ஆனால் ராமாயணம் வானரர்களை 'வெள்ளைக்காரர் ஜாதி' யில் தான் சேர்த்துவிட்டது ! வாலியின் நிறம் பூர்ணசந்திரன் போல் ஜில்லென்றிருக்கும் என்கிறான் கவிஞன்.

சுக்கிரீவனும் வெள்ளை வானரம் தான். அனுமனும் வெள்ளை தான். ஆனால் வாலி வெள்ளை வெளேரென்று பால் நிலாவைப்போல் இருக்கிறானாம்.

வாலியின் கொடுமைக்கு எதிராக எமன் கொடுமையையும் சொல்ல முடியாதாம். 'சுக்கிரீவ ஆக்ஞை' என்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. ஆனால் வாலியின் ஆக்ஞை யென்றால் எமனும் நடுங்கிப் போகவேண்டியது தான். வாலி சிவபக்தனாயினும் ரௌத்ராகாரமான கோபத்தையும் கொலைத் தொழில் ஆற்றலையும்கூட அப்பெருமானிடம் வரப்பிரசாதமாகப் பெற்றுக்கொண்டானோ, என்னவோ? அவரும் காலகாலன்; இந்தப் பக்த வாலியும் எமனாலும் தாங்க முடியாத ஆக்ஞைகளைப் பிறப்பிக்கக்கூடிய வரம்பில்லாத ஆற்றலுடையவன் தானே. மேனி சந்திரிகை போல் ஜில்லென்றிருக்க, குணமோ கொடிய நெருப்பு !

சித்திர ராமாயணம்

320. உடல் கடைந்தது!

(அனுமன் சொன்ன இருகதைகள்)

மின்வெட்டுவது போல் பளிச்சப் பளிச்சென்று மின்னும் கோரப் பற்கள் தோன்ற இளித்த வாயனாய், கண்டவர் நடுங்க விழிக்கும் கோரக் கண்ணனாய், கோரப் பல்லனாய், வந்து சேர்ந்தான் எதிர்த்துப் போர் செய்ய. 'இப்படி வருவான் எதிரி, நமது குலத்துப் பகைவன்' என்று எதிர் பார்த்தது தான்.

அவனைக்கொண்டே அவனை வென்றது!

'அதோ வருகிறான், வந்து கொண்டிருக்கிறான், வந்துகொண்டே யிருக்கிறான்' என்று கண்டு கொண்டவர்கள், 'இதோ வந்தான், வந்து சேர்ந்தான், வந்து சேர்ந்துவிட்டான், வந்து முட்டி விட்டான்!' என்று சொல்லும்படி அந்த எதிரி மோதிப் போர் செய்யத் தொடங்கி விட்டான்:

முன்அ வன்குலப்
  பகைஞன் முட்டினன்,
மின்எ யிற்றுவாள்
  அவுணன், மேன்மையான்.

[மின் எயிற்று வாள் அவுணன்-மின் வெட்டுவது போல் விளங்கும் கோரப் பற்களை வீர வாள்போல் உபயோகிக்கும் அசுரன்.]

இந்த அசுரனுடைய மேன்மை இது: புலிபோல் பற்களை உபயோகித்து எதிரியைக் கிழித்து விடக் கூடிய மிருக பலம். ஆனால் இந்த 'மேன்மை' இந்தச் சண்டையில் பலிக்க வில்லை.

பைத்தியங் கொண்ட மாடுபோல் முட்டி மோதிப் புலிபோல் எதிரியைக் கிழித்தெறிய முயன்றவன் அந்த எதிரியுடன் நேராக ஒட்டி நிற்கவும் அஞ்சிப் பின்வாங்குகிறான். நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொள்ள ஓடிப் போகிறான். ஏன் அப்படி?

முட்டி நின்றவன்
  முரண்உ ரத்தின்நேர்
ஒட்ட அஞ்சிநெஞ்(சு)
  உலைய ஓடினன்!

[முரண் உரம் – மிக்க வலிமை வாய்ந்த பலம்; மிக்க வலிமை வாய்ந்த நெஞ்சு; (இங்கே) வாலியின் மற நெஞ்சு.]

இந்த அசுர மிருகத்தின் முரட்டுத் தனமாகிய வலிமையில் பாதி வாலியின் நெஞ்சிலே போய்ச் சேர்ந்துவிட்டதாம். இப்போது வாலி = ½ அசுரன் + வாலி. இந்த நிலையில் வாலி அசுரனின் பலத்தைக் கொண்டே அசுரனைத் தடுத்து நிறுத்தித் தன் பலத்தைக் கொண்டு எளிதில் வீழ்த்திவிட முடியுமே!

ராவண பந்துவின் உயிரை உண்டது

எதிரி தான் சாமானிய எதிரியா? மாயாவியான அசுரன்; பெயரும் மாயாவி. ஸாக்ஷாத் ராவணேச்வரனுடைய மைத்துனப் பேர்வழி! ஆனால் வாலியோடல்லவா வலுச்சண்டைக்கு வந்து மாட்டிக்கொண்டான்? வாலியின் புஜபலம்தான் தெரியுமா, நன்றாகத்

தெளிவாக? நேர் நின்றவர்களின் பாதி வலிமையை அப்படியே இழுத்து வாங்கிக்கொள்ளும் வர பலம் தெரியுமா?

'முட்டாள்தனமாக அல்லவோ வந்து முட்டிக்கொண்டோம்?' என்று நெஞ்சுலைந்து ஓடுகிறவன், 'இந்தப் பூகோளத்தில் இந்த வாலி — கோபத்திலிருந்து இனிமேல் தப்பிப் பிழைத்து வாழும் இடம்தான் எங்கே?' என்று நடுங்கிப் போகிறான். நடுநடுங்கி எங்கே போகிறான்? பாருங்கள், போய் விடுகிறான் பிலத்திற்குள்ளே:

'வட்ட மண்டலத்(து),
அரிது வாழ்வெனு,
எட்ட ரும்பெரும்
பிலனுள் எய்தினன்.

[வட்ட மண்டலம் — பூமண்டலம். எனு — என்று எண்ணி. எட்டரு — பாய்ந்து எட்ட முடியாத. பெரும் பிலன் — பெரிய (குகை போன்ற) பிலத் துவாரம்.]

மாயா பலம் கொண்ட மாயாவியான தால்தான் அந்த மாயா பலத்தில் பாதியை இழந்தும் இப்படித் தப்பி ஓடிப் பிலத் துவாரத்திற்குள்ளே புகுந்து கொள்ள முடிகிறது!

அப்போது வானர ராஜ்யத்தில் வாலி ராஜா, சுக்ரீவன் இளவரசு. அண்ணன் தம்பியைப் பிலத்துவாரத்தின் வாசலில் காவல் வைத்துத் தான் அசுரனைத் தேடிப் போகிறான் பிலத்துவாரத்திற்குள்ளே.



புதுமை எழுத்தாளர்கள் சொல்வது போல் நாள்கள் வாரங்களாய் வாரங்கள் மாதங்களாய் உருண்டோடுகின்றன. இரண்டு வருஷமும் நாலு மாதமும் இப்படி ஓடிவிடுகின்றன. வாலிக்கு மாயாவியின் மாய பலத்தால் தீங்கு நேர்ந்துவிட்டது என்றே நம்பி விடுகிறார்கள் தம்பி முதலானவர்கள்.

'வாலியைக் கொன்றவனை நான் கொன்றொழிப்பேன்; அல்லது நானும் கொல்லப்பட்டு ஒழிந்து போவேன்' என்று சொல்லிச் சுக்கிரீவனும் பிலத்தில் நுழையப் போகிறான். எனினும் மந்திரிமார் தடுத்துப் பலவாறு சமாதானம் சொல்லிச் சுக்கிரீவனுக்குப் பட்டம் கட்டி வைக்கிறார்கள். வாலியைக் கொன்ற மாயாவி சுக்கிரீவன் முதலானவர்களையும் கொல்ல மீண்டு வரக்கூடுமென்று அந்தப் பிலத்துவார வழியையும் அடைத்து வைக்கிறார்கள்.

ஆனால் நடந்ததென்ன? மாயாவி வதம் முடித்துக்கொண்டு வாலி வருகிறான். அந்த வீர வெறியையும் வெற்றி-வெறியையும், எவ்வளவு சொற்செட்டுடன், எவ்வளவு சந்தர்ப்பப் பொருத்தத்துடன், வர்ணிக்கிறான் கவிஞன்:

ஒளிந்த வன்னுயிர்க்
கள்ளை உன்(டு)உளம்
களித்த வாலியும்
கடிதின் எய்தினன்.

[ஒளித்தவன் — பிலத்தில் ஒளித்திருந்தவனான மாயாவி. உயிர்க் கள் — உயிராகிய கள். களித்த — கள்வெறி போல் வெற்றி-வெறி ஏறப்பெற்ற. கடிதின் — விரைவாக.]

— உண்ட வெறி

அசுரனின் உயிர்க்கள்ளை யுண்ட அந்த வெறியால் வாலி நடந்ததையெல்லாம் பொறுமையாக விசாரித்துப் புரிந்துகொள்ளவில்லை, முடியவில்லை. 'தம்பி, தம்பி!' என்று கூப்பிட்டுக்கொண்டே பின் வாசலுக்கு வந்து





சேர்கிறான். வாசல் அடைப்பட்டிருப்பதைக் கண்டதும் ஆத்திரமாய், 'அடே சுக்கிரீவா!' என்று உரக்கக் கூச்சலிடுகிறான். அதே சத்தம் தான் எதிரொலியாக வருகிறது.

'நல்ல வேலை செய்தார் நமது தம்பியார், நல்ல காவல்!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான் வாலி:

விளித்து நின்றுவே(று)
உரைபெறான், 'இருந்(து)
அளித்த வாறுநன்(று)
இளவலார்!' எனா —

[விளித்து — கூப்பிட்டு. அளித்த வாறு — காவல் செய்த விதம். இளவலார் — தம்பியார். எனா — என்று சொல்லி.]

பிறகு வாலி என்ன செய்கிறான், எவ்வளவு படுவேகமாய்க் காரியங்கள் நடைபெறத் தொடங்குகின்றன, பார்த்துக் கொள்ளுங்கள்:

வாள்வி சைத்துவான்
வளிநி மிர்ந்தெனக்
கால்வி சைத்(து)அவன்
கடிநின் எற்றலும்,
நீல்நி றத்துவிண்
நெடுமு கட்டவும்
வேலை புக்கவும்
பெரிய வெற்பெலாம்!

[விசைத்து — விசையுடன் தூக்கி. வான் வளி — வானத்தைக் கலக்கும் சண்டமாருதம். நிமிர்ந்தென — நிமிர்ந்தாற்போல. எற்றலும் — உதைத்துத் தள்ளின மாத்திரத்திலே. நீல் நிறம் — நீல நிறம். விண் — வானம். முகட்டவும் — முகடு அல்லது உச்சியை அடைந்ததும். வேலை — சமுத்திரம். புக்கவும் — புகுந்தனவும். வெற்பு — மலைகள்.]

மாயாவிக்குப் பயந்து மலைகளைத் தூக்கிப் போட்டுப் பில வாசல்களை அடைத்து வைத்திருந்தார்களாம் அநுமனைப் போன்ற வானர வீரர்கள். சேது பந்தனத்திற்கு மலைகளைத் தூக்

கித் தூக்கிப்போட வேண்டுமல்லவா இனிமேல்? அதற்கு முற்பயிற்சி அந்தப் பில வாசலில் நடந்திருக்க வேண்டும்! நடக்கட்டும்; அந்த மலைகளெல்லாம் வாலியின் வால் வலிமையாலும் கால் வலிமையாலும் விண்ணிலும் கடலிலும் போய் விழுந்து விடுகின்றனவாம். இப்படி வாலியே சேதுபந்தனத்தைத் தொடங்கி வைத்தானோ, என்னவோ!

இப்படியெல்லாம் 'உயர்வு நவிற்சி' யுடன் வாலியின் படுவேகத்தையும் கடுங் கோபத்தையும் வருணிக்கத் தொடங்குகிறான் அனுமன். ஆம்; அனுமன்தானே ராமன் கண் முன்பு இந்தக் கதையை நடத்திக் கொண்டிருக்கிறான்?

குறைக் கதையையும் பார்த்து விடுவோம்:

ஏறி னான்அவன்,
எவரும் அஞ்சுறச்
சீறி னான்,நெடுந்
சிகரம் எய்தினான்.

சுக்கிரீவன் கொலுவிருந்த அந்த மலைச் சிகரத்தை வாலி அடைந்ததும், உடனே சுக்கிரீவன் அண்ணன் காலில் விழுந்து வணங்குகிறான். உள்ளத்தில் கள்ளமிருந்தால் நடுங்கி ஒடுங்கி ஒளித்துக் கொண்டிருப்பானல்லவா? அப்படிச் செய்யாமல் எதிர் வந்து வணங்கியதிலிருந்தே வாலியைப்போன்ற அறிவாளி சரியானபடி ஊகஞ் செய்து கொண்டிருக்க வேண்டுமல்லவா?

கண்ட வெறி

ஆனால் அசுரனுடைய ஆவியை உண்ட வெறி அந்த அசுர ஆவேசத்தையும் உட்கொண்டு விட்டதுபோலத் தோன்றுகிறது. மாயாவியின் பாதி பலத்தோடு அந்த அசுர மிருகத்தின் முழு வெறியும் வாலியை அடைந்து விட்டது போலக் காண்கிறது. இதற்கு ஏற்ற ஸம்ஸ்காரங்களும் செயல்களும் வாலியுள்ளத்திலே நீண்ட காலமாக இடம் பெற்றிருக்க வேண்டும். ஆகவேதான் சுக்கிரீவன் வணங்கி உண்மை உணர்த்தியும் வாலி உணர்கின்றானில்லை.

'உன்னுடைய மந்திரி கோஷ்டிதான் என்னை அரசாளச் செய்துவிட்டது. நானும் வெட்கம் இல்லாமல் இசைந்தேனே, அந்தக் குற்றத்தை நீ தான் பொறுத்தருள வேணும்' என்று நாணி நிற்கிறான் சுக்கிரீவன். வாலியோ கோணி நின்று கொடுமை பேசுகிறான்.

வாலி கூறிய நெடுங்கொடுமையைத் திருப்பிக் கூறவும் கூசி நாணிப் போகிறது அனுமனது பண்பட்ட உள்ளம். வாலியின் நெடுங்கொடுமையில் வார்த்தை நீளமில்லை, கொடுமைதான் நீளமானது என்பது குறிப்பு. வார்த்தை குறைகச் செயல் மிகும் பராக்கிரமசாலியல்லவா வாலி?

அடல்க டந்ததோள் —
அவனை அஞ்சிவெங்
குடல்க லங்கிஎம்
குலமொ டுங்க,முன்
கடல்க டைந்தவெங்
கரத லங்களால்
உடல்க டைந்தனன்,
இவனு லைந்தனன்!

[அடல் கடந்த — சாதாரண வலிமையைக் கடந்து நின்ற அபார வலிமையோடு கூடிய. தோள் அவன் — தோளையுடைய வாலி. வெங் குடல் — எதற்கும் கலங்காத குடல்கள். குலம் — கூட்டம். வெங்கரதலங்களால் — கொடிய கைகளால்.]

கடல் கடைந்த கைகளால் சுக்கிரீவனை உடல் கடைந்தானென்று சொல்லும் அனுமன், வாலி கடல் கடைந்த அந்தப் பராக்கிரமத்தை ஏற்கெனவே ராமனுக்குத் தெரிவித்துத்தான் இருக்கிறான்.

அத்தகைய முரட்டுக் கைகளால் (கரதலங்களால்) சுக்கிரீவனின் உடம்பில் வேகமாய் விழுந்த அடிகளையெல்லாம் குத்துக்களையெல்லாம் — அப்பம் போலக் கொழுக்கட்டை போல வீங்கிக் கிடக்கிற இடங்களையெல்லாம் — அப்படி அப்படியே தொட்டுக் காட்டுவதுபோல் அமைந்திருக்கிறது இந்தப் பாட்டு.